நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYA POOMI

පුදිය පූමි

சுற்று 07 மே/ஜுன் 2000 பக்கம் 8 விலை 10/= சுழற்சி 35


## தணிக்கையம் பதி

புதிதான கதை யேனும் புனைவேனும் அரசாரை
எதுவேனும் குறையாக எழுதாரேல் மகிழ்வோரே
அதிகார வலுவாலே அரசாரின் பகை மாளும்
விதமான கதையாவும் விலக்காமல் அருள்வோரே
மதியாலே குறைவாகி மனதால் பொய் நினையாமல்
விதியாலே அழிவோரின் வினைதீர வருவோரே
கதையேனும் நிசமாயின் கரிபூசி அதை ஆளும்
பதியானீர் தணிக்காசற்பதி வாழும் பெருமாளே !

*அருண்ட கிரிநாதர்*

## 5 லட்சம் மக்களின் கதி ! வாழ்வா ? சாவா ?

குடாநாடு இன்றைய யுத்தத்தின் உச்ச களமாகக் காணப் படுகின்றது. அரசாங்கம் படைகள் இறுதிவரை யாழ்ப்பாணத்தை கை இழக்க மாட்டோம் என்று கூறி

தணிக்கை

என்று கூறி வருகிறார்கள். யுத்தம் நாளுக்கு நாள் வேகமடைந்து வருகின்றது. ஆனால் அங்குள்ள ஐந்து லட்சம் மக்களின் கதி என்னவாகப் போகின்றது என்பதே எங்கும் பதட்டத்துடன் கேட்கப்படும் கேள்வியாகும். உணவு, மருந்து இருப்பிடம் மற்றும் அன்றாட அத்தியாவசியத் தேவைகள் அங்குள்ள மக்கள் பெறுவதற்கு வாய்ப்பு வசதிகள் குறைந்து கொண்டே செல்கின்றன. நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் குடாநாட்டிற்குமான சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட நிலை தொடர்கிறது. வெளிநாடுகளுக்குமான வழமையான தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட நிலை காணப்படுகின்றது. குடா நாட்டிற்கான போக்கு வரத்து எல்லா வழிகளாலும்

தணிக்கை

இந் நிலையில் குடாநாட்டு மக்களுக்கான உணவு மருந்து இருப்பிடம் மற்றும் அத்தியாவசியத் தேவைகளை உறுதிப்படுத்துவது யார் என்பதே பிரதான பிரச்சினையாகும்.

தணிக்கை

அகப்பட்டுள்ள ஒரு அவல நிலையே காணப்படுகின்றது. காயப்பட்ட மக்களுக்கு உரிய சிகிச்சை தேவைப்படுவதாகவும் மருந்துவகைகளின் தட்டுப்பாடுகள் நிலவுவதாகவும் கூறப்படுகின்றது. உரிய மருத்துவ வசதியின்றி பலர் இறந்துள்ளதாகவும் செய்திகள் கசிந்துள்ளன. மேலும் இன்றைய யுத்த சூழலைப் பயன்படுத்தி பதுக்கல் கள்ளச் சந்தை போன்றவற்றின் மூலம் கொள்ளை லாபம் சம்பாதிப்போர் தமது கை வரிசைகளைக் காட்டி வருவதாகவும் அறிய முடிகின்றது. எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என்பது போல மக்கள் விரோத சக்திகள் தத்தமது பணப் பைகளை நிரப்பிக் கொள்ளும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர் என்றும் அறிய முடிகின்றது. இன் நிலையில் தனிமைப் பட்டு போர்ச் சூழலுக்குள் அகப்பட்டு நிற்கும் மக்களின் அவல நிலைக்கு மாற்று வழி என்ன? என்பதே இன்றைய பிரதான கேள்வியாகும்.

*தணிக்கை தணிக்கை தணிக்கை*

# வல்லரசுகள் ஊடுருவ ஆயத்தம் !

நாட்டில் இடம் பெற்று வந்த யுத்தம் உச்ச நிலையை அடைந்து நிற்கிறது. நாட்டின் சுதந்திரம் இறமை சுயாதிபத்தியம் ஆள்புல ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு ஆபத்து வந்துள்ளதாகவும் அவற்றைப் பாதுகாப்பதற்கு அனைத்து ஆதரவையும் வழங்குங்கள் என ஆட்சி அதிகாரத்தின் உச்ச நிலையில் இருந்து மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். விலைகளின் உயர்வுகளையோ வரிகளின் அதிகரிப்பையோ பொருட்படுத்தக் கூடாது என்றும் இரண்டு நாள் சம்பளத்தை வழங்குமாறும் அரசாங்க தனியார் துறை ஊழியர்கள் வேண்டப்பட்டுள்ளனர். கடந்த 03-05-2000 அன்று நடு நிசியிலிருந்து அமுலுக்கு கொண்டுவரப்பட்ட நாட்டை யுத்த நிலையில் வைத்திருக்கும் அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ்

தணிக்கை

அதன் கீழ் தமிழ் சிங்கள ஆங்கில பத்திரிகைகள் மூன்று தடை செய்யப்பட்டும் உள்ளன. பத்திரிகைகள் கடுமையான தணிக்கைக்கு உட்பட்டே வெளிவர நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளன.

மேற் கூறிய சூழ் நிலையால் மக்களது அன்றாட வாழ்க்கைச் செலவுகள் நாளாந்தம் வனத்தை நோக்கி உயர்ந்து கொண்டு செல்கின்றன. ஒரு

தணிக்கை

யுத்தம் நடைபெறும் வடக்கின் குடாநாட்டிலிருந்து

தணிக்கை

பெறமுடியாது உள்ளது. அப்பிரதேசம் சகல வழிகளாலும் தொடர்பறுந்து காணப்படுகிறது. அங்கு வாழும் ஐந்து லட்சம் மக்களின் கதிபற்றி அரசதரப்பிலிருந்து கூறப்படுவதை மட்டுமே கேட்க முடிகிறது. அம் மக்களின் உணவு, மருந்து இருப்பிடம், யுத்த பீதி, பாதுகாப்பு போன்றவற்றை அறிய முடியாது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் உலகில் இருந்தும் துண்டிக்கப்பட்ட நிலை நீடிக்கின்றது. இந்நிலையிலே இவ் விவகாரத்தில் உலகின் கவனம் திரும்பியுள்ளது. குறிப்பாக உலகின். முதல் இலக்க மேலாதிக்க வல்லரசாகவும் உலகப் பொலீஸ்காரனாகவும் பவனி வரும் அமெரிக்காவின் அதீத அக்கறை என்று மில்லாதவாறு இலங்கை மீது வீழ்ந்துள்ளது. ஏதோ ஒருவகையில் மூக்கை நுளைத்து பின்பு தலையைச் செலுத்தி இறுதியில் முழுமையான தலையீடு என்ற நிலைக்கு கொண்டு வந்துவிட அமெரிக்கா அடியெடுத்து நடக்க ஆரம்பித்துவிட்டது. இதனை இலங்கைக் கடற் பரப்பை நோக்கி நகர்த்தியிருக்கும் யுத்தக் கப்பல்களின் நகர்வு சமிக்கை காட்டியுள்ளது. அத்துடன் வெள்ளை மாளிகையின் உயர் ராஜதந்திரிகள் அடிக்கடி கொழும்பு நோக்கி வந்து சென்று கொண்டே இருக்கிறார்கள். அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான இஸ்ரவேல் மீண்டும் இலங்கைக்குள் வந்து குடி புகுந்து கொள்ள வைக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேல் எத்தகைய நாடு என்பது நமது மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டிய அவசியம் இல்லை. அதே வேளை பிரான்ஸ், பிரித்தனியா போன்ற மேற்குக சகபாடிகள் அமெரிக்காவிற்கு பக்கத்துணையாக நிற்பதற்கு தயாராகி உள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

மறுபுறத்திலே பிராந்திய மேலாதிக்கத்தை உள்ளுறையாகக் கொண்ட இந்தியா தனது செயற்பாட்டை ஏற்கனவே முறைப்படுத்தியும் நிரைப்படுத்தியும் வந்துள்ளது. மீண்டும் ஒரு வாய்ப்புக்காக அது காத்திருக்கிறது. இந்தியா தற்போதைய பிரச்சினையில் ராணுவத் தலையீடு செய்யப் போவதில்லை என்றே கூறி வருகின்றது. அதே வேளை மனிதாபிமான உதவி வழங்கத் தயாராக இருப்பதாகக் கூறிக் கொள்கிறது. அந்த மனிதாபிமான உதவி என்பதன் அர்த்தம் பல விளக்கங்களையும் தரவல்லதாகும்.

ஏற்கனவே நோர்வே நாடு இனப்பிரச்சினை விடயத்தில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையில்

*8ம் பக்கம் பார்க்க*

## தணிக்கை விதி

**அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ள அவசரகாலச் சட்டவிதிகளின் கீழான பத்திரிகைத் தணிக்கை நடைமுறைகளுக்கு உட்பட்டே புதியபூமியின் கட்டுரைகள் செய்திகள் வெளிவருகின்றன என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.**

*ஆசிரியர் குழு*

# சம்பள உயர்வுக்கு தொடர்ந்து மறுப்பு பிரார்த்தனைப் போராட்டம் வெறும் ஏமாற்று !

சம்பள உயர்வு கோரி எதிர்வரும் யூன் 11ஆம் திகதி முதல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக இ.தொ.கா.வின் ஆறுமுகம் தொண்டமான் அறிவித்துள்ளார் அமுலில் இருக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழான புதிய ஒழுங்குவிதிகள் வேலைநிறுத்தப் போராட்டத்தை சட்டவிரோதமாக்குவதால் பிரார்த்தனை செய்யப் போவதாக அறிவிக்கப் பட்டுள்ளது. அதாவது வேலைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் தோட்டக்கம்பனிகளுக்கு எவ்வித நட்டமும் ஏற்படாது கோயில்களில் கூடி பூஜைகளை செய்வதே பிரார்த்தனைப் போராட்டமாகும்.

இதற்கு சிலர் பெருமைக்குரியதாக ஒரு தர்க்கத்தை முன்வைப்பதுண்டு. அதாவது இ.தொ.கா. வின் மூளை என்று அழைக்கப்பட்ட சட்டத்தரணி ஜெயா பெரிசுந்தரம் கண்டுப்பிடித்த போராட்டமே பிரார்த்தனை போராட்டம் என்று சிலர் கூறுவர். அதாவது பிரஜாவுரிமை வழங்கக் கோரி வேலைநிறுத்தப் போராட்டம் செய்ய முடியாது அன்றைய ஜே. ஆரின் அரசாங்கமும் அடக்குமுறை சட்டத்தினால் தடை விதித்திருந்தது. அத்தடையையும் மீறி போராட்டம் செய்யப்போவதாக இ.தொ.கா. தலைவர் சௌ. தொண்டான் அறிவித்திருந்தார். அந்த அறிவிப்புக்கு அணு சரணையாகவே பிரார்த்தனை போராட்டத்தை ஜெயா பெரிசுந்தரம் முன்வைத்ததாக கூறப்படுகிறது.

இதில் கவனிக்க வேண்டியது யாதெனில் பிரார்த்தனைப் போராட்டம் பிரஜா உரிமையை பெறுவதற்காக செய்யப்பட்டதா ? இல்லை ஜே. ஆரின் அரசாங்கத்திற்கு தனது பலத்தை காட்ட சௌ. தொண்டமான் மேற்கொண்டதே பிரார்த்தனை போராட்டமாகும். பிரார்த்தனை போராட்டத்தினாலா பிரஜாவுரிமை கிடைத்தது ? இல்லை. இந்தியாவினது அழுத்தமே அதற்கு பாரிய பங்களிப்பை செய்தது.

அதைவிட வேலை நிறுத்தப் போராட்டத்தை தடைசெய்யும் ஒழுங்குவிதிகளை ஆக்கிய ஜே.ஆர். அரசாங்கத்திற்கு தொண்டமான் ஆதரவளித்து விட்டு அவ்வொழுங்கு விதிகளை அமுலுக்கு கொண்டு வந்த பிரேரணைக்கு பாராளுமன்றத்தில் கையுயர்த்தி விட்டு, வெளியில் வந்து அதனை மீறி பிராத்தனைப் போராட்டம் செய்ய போவதாக கூறியது வேடிக்கையானதல்லவா. இதனை தொழிலாளர் துரோகம் என்றே கூறுதல் வேண்டும்.

தற்போதைய உத்தேச பிரார்த்தனை போராட்டம் பற்றிய அறிவிப்பு செய்யப்பட்டவுடன் மேற்கூறப்பட்ட விடயங்களே நினைவிற்கு வருகின்றன.

பிரார்த்தனை போராட்டம் பற்றிய அறிவிப்பு செய்யப்பட்டப் பிறகு ஜனாதிபதி தலையிட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக் கொடுப்பார் என்று கூறப்பட்டது.

அதற்குப் பிறகு தொழிலமைச்சர் தலையிட்டு தோட்டக் கம்பெனிகளுக்கு அழுத்தத்தை கொடுத்து சம்பள உயர்வை பெற்றுக் கொடுப்பார் என்றும் சிலர் எதிர்பார்ப்பை கொண்டிருக்கின்றனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு சட்டவிதிகள் அமுலுக்கு வர முன்ப தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வேண்டும் என்று உரத்து பேசியோர் மௌனமாகிவுள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் பிரார்த்தனைப் போராட்டம் நடத்தப்படுவது எதற்காக? வலுவிழந்து போயிருக்கும் ஆறுமுகம் தொண்டமானுக்கு வலுவைச் சேர்ப்பதற்கு தோட்டந் தோறும் செல்வதற்காகவா? இல்லாவிட்டால் எல்லா மலையகப் பாராளுமன்ற வாதிகளும் அவர்களின் பிரசாரங்களை செய்வதற்கு வசதி செய்து கொடுப்பதற்காகவா ?

எது எவ்வாறிருப்பினும் தோட்டக் கம்பெனிகளின் நிலைப்பாட்டை சிறு துரும்புக்கு கூட அசைக்க முடியாத நிலையிலேயே மலையக தொழிற்சங்க இயக்கங்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இருக்கின்றனர் என்பது தெளிவாக்கப் பட்டிருக்கிறது. இன்று இ.தொ.கா. விற்கும் அமைச்சர் ஆறுமுகத்திற்கும் தான் பிரார்த்தனை தேவை. ஏனெனில் இ.தொ.கா. வைச் சிதறாமல் காப்பாற்ற. ஆனால் தொழிலாளர்களுக்கு போராட்டமே தேவை. அதுவே அவர்களுக்கு இருக்கும் இறுதி வழி.

▲▲▲

## மூன்று பத்திரிகைகளுக்குத் தடை

கடந்த மே 3ம் திகதி நள்ளிரவில் இருந்து அமுலுக்கு கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை விதிகளை மீறியதாகக் கூறி மூன்று பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' நாளிதழ், கொழும்பில் இருந்து வெளிவரும் 'சண்டே லீடர்' ஆங்கில வார இதழ், அதன் சகோதர இதழான, 'இரிதா பெரமுன', சிங்கள வார இதழ் என்பனவாகும். இப்பத்திரிகைகள் மீதான தடையை அகற்றுமாறும் பத்திரிகைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தணிக்கையை கைவிடுமாறும் பல்வேறுபட்ட அரசியல் சமூக பத்திரிகை அமைப்புகள் வற்புறுத்திவருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக மக்கள் சார்பாக கண்ணீர் விடும் தலைவர்கள் !

மலையக மக்கள் எதிர் நோக்கி நிற்கும் பிரச்சினைகள் மிகவும் பாரியனவாகும். தோட்டக் கொம்பனிகளின் கெடுபிடிகளில் முதன்மையானதாகக் காணப்படுவது சம்பளப் பிரச்சினை. 101 ரூபா சம்பளம் கிடைப்பதாகக் கூறப்படினும் உண்மைச் சம்பளம் 95 ரூபா மட்டுமே. 6 ரூபா போனஸ் எல்லோருக்கும் எப்பொழுதும் கிடைப்பதில்லை. இவை கடந்த வருடத்துடன் முடிந்த கதை. இவ்வருடத்தில் தீர்மானிக்க வேண்டிய சம்பள உயர்வு பற்றி இன்றுவரை முடிவே இல்லை. அதனைத் தட்டிக் கேட்டு களத்தில் இறங்கும் தைரியம் எவருக்கும் இல்லாதிருக்கிறது. ஆனால் தாங்களே மலையகத்தின் தன்மானத் தலைவர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் சிலர் இருக்கிறார்கள்.

அண்மைக் காலமாக மலையக மக்கள் சார்பாக சிலர் அடிக்கடி அறிக்கைகள், சந்திப்புக்கள், கூட்டங்கள் எனத் தடல் புடலாக நடாத்தி வருகிறார்கள். பெரும்பாலும் கொழும்பில் இவர்கள் நடாத்தும் கூட்டங்களுக்கு குறைவே இல்லை. அரசியலமைப்பு திருத்தத்தில் மலையக மக்கள் சார்பான கோரிக்கைகளுக்காகக் கூடுகின்றோம் என்றார்கள். ஆனால் கூடி ஆராய்ந்தவை என்னவென்றால் தேர்தல் தொகுதிகளை எப்படிப் பெருக்கலாம் என்பது பற்றியதே. சம்பள உயர்வுக்கு கூடிப் பேசுகின்றோம் என்றார்கள். ஆனால் எத்தினை ரூபாவைக் கூட்டிக் கேட்பது என்பதில் முடிவில்லை. தற்போதைய நாட்டு நிலைமை பற்றி மலையகத் தலைவர்கள் கூடி ஆராய்கிறார்கள் என பத்திரிகை வானொலிகள் ஒரே முழக்கம். ஆனால் என்ன ஆராய்ந்தார்கள். என்ன செய்ய முடிவு என்றால் யாவும் ஒரு அறிக்கையில் அடக்கம். கடைசியாக ஒரு பம்மாத்து விடப்பட்டது. அதாவது மலையக மக்கள் சம்மந்தமாக வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு விளக்கமளிக்க மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு என்பதாகும். ஐந்து ஆண்டுகளாக அரை அமைச்சராக அரசாங்கத்தில் இருந்து கொண்டு அத்தனை தூதரகங்களின் விருந்துகளிலும் கலந்து கொண்ட வேளைகளில் மலையக மக்கள் பற்றி வாயே திறக்காத சந்திரசேகரன் இப்போது மட்டும் ஒவ்வொரு தூதரக வாசல் படி ஏறிப் பிரச்சினையை விளங்க வைக்கப் போவது தான் விற்தையாக உள்ளது.

மலையக மக்கள் சார்பாக நீட்டி நிமிர்த்தி அறிக்கை விடுவது கூட்டம் கூடுவது, மாநாடு நடாத்துவது போன்ற சலசலப்புகளில் பெ. சந்திரசேகரன், மனோகணேசன், பி.பி. தேவராஜ், எம்.எஸ். செல்லச்சாமி போன்றவர்கள் முன்நிற்கிறார்கள். இவர்கள் நேர்மையாகவும் உள்ளத்தூய்மையுடனும் மலையக மக்களுக்காகப் பேசுகிறார்களா ? அன்றி எதிர் வரும் பொதுத் தேர்தலை மனதில் வைத்துப் பேசுகிறார்களா ? என்பதே பிரச்சினையாக உள்ளது. மலையக மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு திட்ட மிடப்பட்ட வழிகளில் இவர்கள் செயல் படுவர்களேயானால் அவர்களது செயற்பாடுகளை வரவேற்க முடியும். ஆனால் அது அவர்களது நோக்கம் அல்ல. மலையக மக்களுக்காக கன்ணீர் விடுவது போன்று ஒரு தோற்றத்தைக் காட்டி பாராளுமன்றத் தேர்தலில் தத்தமது வாக்கு வங்கியைப் பெருப்பித்துக் கொள்வதற்கே முழு மூச்சாகச் செயல்படுகிறார்கள். அதற்கான பிரசாரத்தின் ஆரம்ப முயற்சியாகவே இந்தக் கனவான்கள் அறிக்கை, கூட்டம், சந்திப்புகள் என நடாத்தி வருகிறார்கள். இவர்களது பம்மாத்து வேலைகளை மலையக மக்கள அறியாதவர்கள் அல்லர். கையில் காசும் உண்டு. பிரசாரத்திற்கு ஊடகங்களும் உண்டு. பணியினைத் தொடர வேண்டியதுதான்.

*அட்டன் ப. அழகர்சாமி*

# பகிடி வதை அசிங்கம் தொடர்கிறது

பகிடிவதையின் அசிங்கமான செயல்கள் பல்கலைக் கழகங்களில் மட்டுமன்றி ஏனைய உயர் கல்வி நிறுவனங்களிலும் தொடர்கின்றது. அண்மையில் வவுனியா, பத்தனை கல்வியியல் கல்லூரிகளில் இடம் பெற்ற பகிடி வதைகளால் குறிப்பிட்ட தொகை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் சில மாணவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற வேண்டிய அளவுக்கு பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். சக மாணவர்களைப் பகிடிவதை என்ற பெயரில் கொடுமைப்படுத்தும் மனித நேயமற்ற வக்கிரப் போக்கை எவ்வாறு மாணவர்கள் பெறுகிறார்கள். ஏற்கனவே மாணவர்கள் கொல்லப்படவும் தற்கொலைக்கு உள்ளாகவும், அங்கவீனர்களாக மாறவும், மனநோயாளிகளாக மாறுவதற்கும் காரணமாக அமைந்த பகிடிவதை என்னும் கொடூரத்தின் ஆழத்தை மாணவர்களில் சிலர் அறிந்து கொள்ளாமல் இருப்பது ஏன் என்பது பலருக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. பகிடிவதை செய்யப்படுவது சரியானது எனவும் பிழையானது எனவும் அணிபிரிந்து மாணவர்கள் அடிபிடியில் இறங்கி நிற்கின்ற நிலை சில பல்கலைக் கழகங்களில் காண முடிகிறது.

இன்றைய சமூக அமைப்பும் அதனை நிலை நிறுத்த முனையும் கல்விக் கொள்கையும் அடிப்படையில மாற்றப்படாதவரை மனிதநேயமற்ற வழியிலான பகிடிவதை என்னும் அசிங்கத்தைக் குறுக்கு வழியிலோ அன்றிப் போதனைகள் மூலமோ நிறுத்தி விடமுடியாது. அதனையே மீண்டும் மீண்டும் இடம் பெறும் பகிடிவதை என்னும் மாணவச் செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன. பரந்த சமூக அக்கறையும் சமூக மாற்றச் சிந்தனைகளும் மாணவர்களிடம் சென்றடையாத வரை அவர்களுக்கான தேவைகள் பற்றி உணரப்படாத சூழலில் பகிடிவதை என்னும்குறுகிய வக்கிர உணர்வுகளும் செயல்பாடுகளும் இருக்கவே செய்யும்.

*சேகர்.*

# வவுனியா ஆடைத் தொழிற்சாலையை நிறுத்த சதியா ?

வவுனியாவில் பல தனியார் தொழிற்சாலைகள் இயங்குகின்ற போதும் அவற்றின் லாப நட்டம் எல்லைக்குட்பட்டவையாகும். மூலதன முதலீடும் ஊழியர் எண்ணிக்கையும் குறைவானவையாகும். இருப்பினும் தனியார் சிறு தொழிலகங்களில் தொழில் புரிவோர் சிறு தொகையினராயினும் பல்வேறு வாழ்க்கை நெருக்குதல்களை எதிர் நோக்கவே செய்கின்றனர்.

ஆனால் வவுனியாவில் கண்டி வீதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையானது மிகப் பெரிய தொழிற்சாலையாக விளங்குவதுடன் இங்கு (1000) ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பையும் பெற்றுள்ளனர். இவ் ஆடைத் தொழிற்சாலையில் 500 ற்கும் மேற்பட்டவர்கள் இளம் யுவதிகளேயாவர். வருமானம் பற்றாக் குறை, வேலையின்மை, வறுமை ஆகிய காரணங்களிற்காக வேலைக்குச் சேர்ந்துள்ள இவர்களில் தமிழ், சிங்களம் இருசாராரும் வேலை செய்வதைக் காண முடியும். இவர்களது ஊதியமும் மட்டுமட்டானதேயாகும்.

இச் சென்றன் காமண்ஸ் (Shentione Garment) தனியார் துணை முதலீட்டு நிறுவனமாகத் திகழ்ந்தாலும் ஊழியர்களின் சட்டரீதியான விடு முறைகள், ஊழியர் சேமலாப நிதி போன்ற வற்ஷறயும் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இத் தொழிற் சாலையில் தயாரிக்கப படுகின்ற ஆடைகள் ஏற்றுமதிக்காகவே தயார் செய்யப்படுகின்றது. அதற்கான துணிகள் கொழும்பிலிருந்து வவுனியா வந்து சேரும் வரை ஆடைத் தொழிற்சாலை பல்வேறுபட்ட அசமந்த நிலமைகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது இதன் தாக்கம் உரிமையாளரையே பாதிக்கச் செய்யும் . சில சமயங்களில் துணி வருவதற்கான தாமதமாகின்ற காரணம் கொழும்பு துறைமுக அதிகாரசபையின் அசட்டை நிலை மற்றும் துணிகள் வந்து சேர்வதில் உள்ள போக்குவரத்து (பாதுகாப்பு) கெடுபிடிகள் என்பன ஆகும். இதனால் ஊழியர்களிற்கு ஒழுங்காக வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டு அவர்கள் துணி வரும்வரை தொடர் விடுமுறைகளில் செல்ல நேரிடுகின்றதுடன் அந்த லீவு நாட்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவையும் உரிமையாளர் கொடுக்க வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்படுவதனால் தொழிற்சாலையின் வருமானம் பின்தங்கும் நிலை தோன்றி இறுதியில் தொழிற்சாலையினை மூடி விடுகின்ற நிலமை தோன்றி விடுமோ என அஞ்சப்படுகின்றது.

அரசாங்கத்தின் அசமந்த போக்கின் தாக்கம் வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை 1000 தொழிலாளர்களுக்கு அரசினால் வேலைவாய்ப்பு வழங்குவதென்பது முடியாத காரியம் ஆக உள்ளது. படித்த எத்தனையோ பேர்களுக்கு அரசாங்கம் வேலை கொடுக்காத போதிலும் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை வாய்ப்புப் பெற்ற தொழிலாளர்களின் வேலைக்காவது உரிய உத்தரவாதம் வழங்க வேண்டும்.

7ம் பக்கம் பர்க்க

கடிதம்

# எம்.பி. பதவிக்கு ஆசைப்பட்டு ஏமாந்து போன கல்லாநிதி

*ஆசிரியர், புதியபூமி*

அன்புடைய ஆசிரியருக்கு,

'புதிய சமதர்மம் என்ற நவசமாஜக் கட்சியின் தமிழ்ப் பிரசார ஏட்டின் ஏப்ரல் இதழில் கலாநிதி விக்கிரமபாகு மாஓவாதமும் புரட்சியும்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் தனது அரசியல் வரலாற்று அறியாமையையா தனது அரசியல் திருகுதாளத்தையா அம்பலப்படுத்தினார் என்று தெரியவில்லை. அவருடைய குழப்பமான சித்தனையூடு ஓடுகிற ஒரு இழை ஏதென்றால் மாஓவாதம் (!) நடைமுறையில் வர்க்க இணக்கப்பாட்டுக்கான கருவியாகவே விளங்கியது. என்பதாகும். இதன. உண்மை பொய்களை ஒருபுறம் வைத்து விட்டு, கழுவிக் காய வைத்த இந்தப் பரிசுத்தரின் அரசியலைப் பார்ப்போம்.

இவரது அரசியலின் முன்னோடிகளில் பிலிப் குணவர்த்தன ஒரு மந்திரிப்பதவிக்காக ஸ்ரீ ல. சு. கட்சியுடனும் இன்னொரு மந்திரிப் பதவிக்காக யூ.என்.பியுடனும் கூட்டுச் சேர்ந்தார். என். எம். மும், கொல்வினும் மந்திரிப் பதவிக்காக ஸ்ரீ. ல. சு. கட்சியுடன் சேர்ந்து தமது இறுதி நாட்களில் யு.என். பி. ஆட்சிக்கும் முட்டுக் கொடுத்தார்கள். நம்முடைய புனிதரோ ஒரு மாகாணசபை சபாநாயகர் பதவிக்காக ஒரே காலத்தில் யூ.என்.பிக்கும் ஜே.வி.பிக்கும் பின்னால் அலைந்து ஏமாந்து போனார்.

அதன் பிறகும் ஆசை விட்டதா ? பாவம் ! எருதின் விதைகள் அறுந்து விழும் என்று எருதின் பின்னால் நெடுந் தூரம் அலைந்து ஏமாந்த நரியின் கதை போல ஜே.வி.பி. மனம் இளகி அடுத்த தேர்தலில் இவர் ஒரு பதவிக்கு அமைச்சர் பதவிக்கு வழியில்லை எனவே ஒரு சில்லறை எம்.பி. பதவிக்கு வழி செய்யும் என்று நம்பி புதிய இடதுசாரி முன்னணியைச் சீரழித்து முடிவில் முட்டாளாக்கப் பட்டார். படித்த முட்டாளை யாரும் முட்டாளாக்க முடியுமா என்று கேட்காதீர்கள். ஆனாலும் இவருடைய அறிஞர் வேடமும் அரசியல் நிபுணர் வேடமும் ஒரு பொழுதில் ஜே.வி.பியின் இனவாதப் பிரகடனத்தால் கலைந்து விட்டன. இவருடைய சமரசங்கள் வர்க்க சமரசங்கள் அல்ல. இவரிடம் பாட்டாளி வர்க்க நலன்கள் பற்றிய அக்கறை இருந்தால் தானே வர்க்க சமரசம் பற்றிப் பேசலாம். தனது மனைவியின் நிலமான்ய குடும்ப அந்தஸ்திலும் தனது நிலமான்ய உறவுகள் பற்றிய வெற்றுப் பிதற்றல்களிலும் குளிர்காய்கிற இந்த நபர் யூ. என். பியை நாடும்போதும் ஜே.வி.பியை நாடும்போதும் தனது வர்க்கத்தின் நலன்களையே இந்த இனவாதிகளிடம் காண்கிறார் என்பதே உண்மை.

இவர் இப்போது பின்நவீனத்துவம் பற்றியும் ஏதோ பிதற்றத் தொடங்கியிருக்கிறார். பௌத்தத்தில் இயங்கியல் பற்றித் தன்னுடைய அண்மைய கண்டுபிடிப்புக்கள் பின்நவீனத்துவத்துக்கு ஒரு மாக்ஸசியப் பங்களீப்பு என்று தனது கட்சி ஏட்டில் தம்பட்டம் அடித்திருக்கிறார். இவருக்குத் தெரியாதவை பல உள்ளன. டி.டி. கொஸாம்பி, ராகுல சங்கிருத்தியாயன் உட்படப் பலர் பௌத்தத்திற்கும் மாக்ஸிச இயங்கியலுக்கும் உள்ள உறவை அரை நூற்றாண்டு முன்பு விரிவாக ஆராய்ந்து உள்ளனர். இது பின்நவீனத்துவத்தின் பிறப்பிற்கு இருபது வருடங்கட்கும் முந்திய விடயம்.

"ஸ்டாலினியம் என்பது ஒரு அதிகார வியாதியாகும்'' என்றும் இந்தப் புனிதர் திருவாய் மலர்ந்துள்ளார். இவரது தலைமைப் பதவிக்கான மோகம் ந.ச.ச. கட்சிக்குள் இவரது சர்வாதிகாரம் என்பன பற்றி அறிந்தவர்கள் ஒவ்வொருவராக இவரிடமிருந்து பிரிந்து விட்டனர். எஞ்சியுள்ள அடிமைகள் எப்போது மீட்சி பெறுவார்களோ தெரியாது. அவர்களிடம் இன்னும் கொஞ்சமாவது சூடு சுரணை மிஞ்சி உள்ளது என்பது என் அற்ப நம்பிக்கை.

*அன்புடன்*
*ஸ்பாட்டகஸ்*
*தொடம்வல்ல வளவு.*

# புத்தரும் பேரினவாதமும்

அண்மையில் பௌத்த மக்கள் புத்தரின் புனித தினமான வெசாக்கைக் கொண்டாடினர். வெசாக் சோடனைகள் எல்லா இடங்களிலும் விமரிசையாகச் செய்யப்பட்டிருந்தன. அவற்றில் புத்தர் தியானம் செய்வது உபதேசம் செய்வது, அருள் பாலிப்பது கருணைகாட்டுவது, சயனம் கொள்வது போன்ற உருவமைப்புகள் பெரிய - சிறிய அளவுகளில் வைக்கப்பட்டிருந்தன. அன்பே உருவான, சாந்த சொரூபியான, கருணை மிக்கவரான புத்தரை சுட்டு விரலை உயர்த்தி ஆவேசமான அரசியல் பேச்சு நிகழ்த்துபவர் போன்று உருவமைப்புச் செய்து நடுத்தர அளவில் வெசாக் சோடனையின் மத்தியில் நிறுத்தப்பட்டிருந்தது. கொழும்பு மருதானை டார்லி வீதியில் இவ்வாறு வைக்கப்பட்டிருந்து. இத்தகைய புத்தரின் நிலை வேறு எங்கும் காண முடியாத ஒன்றாகும். இது பேரினவாதிகளின் எண்ணத்தில் உதித்த உருவமைப்பேயாகும். இவ்வருடம் சுட்டு விரலைக் காட்டி நிற்கும் புத்தரை உருவகித்தவர்கள் அடுத்தடுத்த வருடங்களில் அவரது கைகளில் எதை எதைக் கொடுத்து நிறுத்திக் கொள்வார்களோ தெரியாது. வாழ்க புத்தரின் போதனைகள்.

# திருமதி டொறீன் மறைவு

இலங்கையின் இடதுசாரி இயக்கம் தோன்றுவதற்கு அடித்தளமாக அமைந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமான 'சூரிய மலர்' இயக்கத்தின் முதலாவது தலைவியாகப் பணி புரிந்த திருமதி டொறீன் விக்கிரமசிங்கா தனது 93 வது வயதில் இயற்கையடைந்தார். இலங்கையில் கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்களில் ஒருவரான டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் மனைவியான டொறீன் பிரித்தானியாவைச் சேர்ந்தவராவார். இடதுசாரி இயக்கத்திற்கு அவரது பணி முக்கிய பங்களிப்பாகும். அவரது இறுதி விருப்பப்படி எவ்வித மதச் சடங்கும் இன்றி இரு கண்களும் கண்சேகரிப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டபின் உடல் மருத்துவக்கல்லூரிக்கு கொடுக்கப் பட்டது.

அவரது மறைவுக்கு 'புதியபூமி' தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

*ஆ. தமு*

# புதிய பூமி

செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

PUTHIYA POOMI පුදිය පූමි

சுற்று 07 மே/ஜூன் 2000 பக்கம் 8 விலை 10/= சுழற்சி 35


S. 47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக்கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844

## நாட்டின் சுதந்திரம்

*இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு தீர்வு காணும் போர்வையில் பல வெளிநாட்டு சக்திகள் இலங்கைக்குள் புகுவதற்கு ஆயத்தங்களை செய்துவருகின்றன. வெளிநாடுகள் இங்கு தலையிடுவதற்கு தேசிய இனப் பிரச்சினை ஏதுவாகியுள்ளது போன்று தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அவற்றின் தலையீடுகள் தேவை என்பதும் நியாயப்படுத்தப்பட்டு வருகிறது. ஆதலால் சுயநிர்ணய உரிமைப்பிரச்சினை சர்வதேச பிரச்சினையாக்கப்பட்டு சுயநிர்ணய உரிமைப் போராட்டம் ஏகாதிபத்திய, மேலாதிக்க எதிர்ப்பை கொண்டதாக வளர்ச்சியடைய வேண்டியிருக்கிறது என்ற எச்சரிக்கையும் அவசியமாகிறது.*

*வெளிநாட்டு மத்தியத்துவம் அனுசரணை என்பவற்றுடன் இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட போது இலங்கையின் சுதந்திரம் சுயாதிபத்தியம், இறைமை ஆள்புல ஒருமைப்பாடு என்பனபற்றி அழுத்திக் கூறிய இலங்கை அரசாங்கம் தற்போது வெளிநாடுகளின் இராணுவ தலையீட்டையே கோரிநிற்கிறது. இந்தியா இராணுவ உதவியை தராவிட்டால் இந்தியாவின் சுதந்திரம் இறைமை சுயாதிபத்தியம் ஆள்புல ஒருமைப்பாடு என்பன பாதிக்கப்படும் என்று இந்தியாவுக்கு அபாயக் கொடியும் காட்டப்பட்டுள்ளது.*

*இந்தியா இராணுவ உதவி தர மறுத்து விட்டதால் மேற்கு நாடுகளின் உதவியை நாடியுள்ளது. இலங்கை அரசாங்கம். அதாவது தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தினை நசுக்க வெளிநாட்டு தலையீடுகளை நியாயப்படுத்தவும் துணியப்பட்டுள்ளது.*

*அதேவேளை நோர்வே முன்னெடுப்பதாக கூறப்படும் பேச்சுவார்த்தை மூலமான சமாதான முயற்சிகள் பின்தள்ளப்படுகிறது.*

*இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மிகவும் ஆரோக்கியமாக இருப்பதாக இலங்கை அரசாங்கமும், அதன் வெளிநாட்டு அமைச்சும் கூறுவதை கேட்கும்போது பல விடயங்களை நினைவு படுத்த வேண்டியிருக்கிறது. எந்த வொரு வெளிநாட்டினதும் அச்சுறுத்தலும் அழுத்தமுமின்றி இருக்கின்ற வெளிநாட்டு உறவே ஆரோக்கியமானதாகும். இலங்கைக்கென பிரத்தியேகமாக வெளிநாட்டுக் கொள்கை எதுவுமில்லை. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையே இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையாகும் என்ற பல வெளிவிவகார நிபுனர்கள் கூறியபோதும் பாகிஸ்தான், சின என்பனவற்றுடன் இந்தியா போர் புரிந்தபோது இலங்கை சுதந்திரமான நிலைப்பாட்டை எடுக்க முடிந்தது. ஜே. ஆரின் காலத்தில் சுதந்திரமான கொள்கையாகவின்றி இந்திய எதிர்ப்பு வெளிநாட்டுக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதால் இந்தியாவிடம் இறுதியில் சரணடைய வேண்டிய நிலை ஏற்பட்டது.*

*பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இந்தியாவுடனான வெளியுறவை சரிப்படுத்தி விட்டதாக கூறப்பட்டாலும் மிக வேகமாக இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இராணுவ உதவி இந்தியாவில் மறுக்கப்பட்டதிலிருந்து மிக வேகமாக இந்திய கசப்புணர்வு அரசாங்க உயர் மட்டத்தில் வெறுப்பாகி வருவதைக் காண முடிகின்றது.*

*முதலாளித்துவ பேரினவாத ஆளும் வர்க்கத்தினரால் இலங்கைவாழ் சகல தேசிய இனங்களுக்கும் ஏற்ற வெளிநாட்டு கொள்கையை கடைப்பிடிக்க முடியாது. எனினும் நாடு, சுதந்திரம், இறைமை, சுயாதிபத்தியம், ஆள்புல ஒருமைப்பாடு என்பவை தொடர்பாக ஆகக்குறைந்த மதிப்பும் நேர்மையும் எதிர்பார்க்க முடியாததாக இருக்கிறது.*

*ஓரினத்தை அடக்குவதற்காக நாட்டின் சுதந்திரம் பறிபோவதையோ இன்னொரு இனத்தின் சுதந்திரம் பறிபோவதையோ அனுமதிக்கப்பட முடியாததாகும். அதேபோன்று ஓரினத்தின் விடுதலையின் பேரால் நாட்டின் சுதந்திரம் பறிபோவதும், இன்னொரு இனம் அடிமைப்படுத்தப்படுவதும் ஏற்கப்பட முடியாது. இதனை ஆளும் வர்க்கத்தினர் விளங்கிக் கொள்ள முடியாதவர்களே. மக்களும் மக்களுக்காக போராடுபவர்களும் விளங்கிக் கொள்வதில் சிரமமாயிருக்காது.*

*நாட்டின் சுதந்திரம் காப்பாற்றப்படுவதற்குரிய ஒரே அடிப்படை நாட்டின் சகல தேசிய இனங்களினதும் உரிமைகள் சமத்துவத்துவமாகவும் சமூக நீதி அடிப்படையிலும் உத்தரவாதப்படுத்துவதிலேயே தங்கி உள்ளது. இது ஆளும் வர்க்க சக்திகளினால் உணரப்படாதவரை அபாயங்களும் ஆபத்துக்களும் பல பக்கங்களில் இருந்தும் வரவே செய்யும். மக்கள் இதனை உணர்ந்து கொள்வது அவசியம்.*

*ஆசிரியர் குழு.*

# தேசிய இனப் பிரச்சினையில் யுத்தம் தீர்வு சமாதானம்

**போர்** என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் எனக் கூவி அழைத்து யுத்தத்தை தொடக்கி வைத்தவர் மறைந்த ஜே.ஆர். போருக்குக் காரணமான தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படக் கூடிய சந்தர்ப்பங்களையெல்லாம் குழப்பி நிராகரித்து விட்டு எந்தப் பிசாசுடன் சேர்ந்தாவது யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முயற்சிகள் எடுக்கப்பட்டன. போரின் மூலம் அல்ல பேச்சுவார்த்தை மூலமான தீர்வும் சமாதானமும் என்று கூறப் பட்டது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. அவர்களே யுத்தத்தின் மூலம் சமாதானம் என்றனர். அதிலும் ஒரு படி மேலே சென்று சமாதானத்திற்கான யுத்தம் என முழக்கம் செய்தனர். முழக்கங்கள் மாறியதே அன்றி தீர்வோ சமாதானமோ வரவில்லை. இறுதியில் உச்சநிலை யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டள்ளது. சகல கவனமும் வளங்களும். யுத்தத்தின் பக்கம் திருப்ப ப்பட்டுள்ளது. இதன் முடிவு என்னவாக இருக்கப் போகின்றது. தீர்வு கிடைக்குமா ? சமாதானம் வந்து விடுமா ? அழிவுகளுக்கு முடிவு ஏற்படுமா ?

யுத்தம் என்பது தனிமனிதர்களின் விருப்பு வெறுப்பினால் தோன்று வதில்லை. சமூகங்கள், வர்க்கங்கள், நாடுகள், குழுக்கள் போன்றவனவற்றின் மத்தியில் தோன்றும் முரண்பாடுகளின் தீர்க்க முடியாத நிலையிலேயே யுத்தம் வெடிக்கின்றது. அவை தாழ்ந்த நிலையில் ஆரம்பித்து உச்ச நிலை வடிவத்தைப் பெறுகின்றன. வர்க்கங்கள் தோன்றிய காலம் முதல் தனிச் சொத்துடமை முறைமை ஏற்பட்டதன் ஊடாக வரலாற்றில் யுத்தங்கள் இருந்தே வந்துள்ளன. வடிவங்களில் வேறு பட்டாலும் வரலாறு முழுவதும் யுத்தங்கள் இருந்தே வந்துள்ளன. ஒவ்வொரு யுத்தத்திலும் சொத்துடைய ஆளும் வர்க்கங்களும் அதிகார சக்திகளும் முன்னணியில் இருந்து மக்கள் மீது யுத்தத்தை திணித்து வந்தள்ளன. அவ்வாறு திணிக்கப்பட்ட யுத்தங்களை மக்கள் வேறு வழி இன்றி எதிர்த்து நிற்க வேண்டியே ஏற்படும். எதிர்ப்பு யுத்தத்தில் மக்கள் பங்கு பற்றுவது தவிர்க்க முடியாததாகின்றது. யுத்தத்தை நீதியான யுத்தம் அநீதியான யுத்தம் என வகைப்படுத்தி அநீதியான யுத்தத்தை நீதியான யுத்தத்தால் எதிர்க்க வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர். இத்தகைய பண்பு உலகில் சகலவகை யுத்தங்களிலும் இருந்து வந்துள்ளது. ஆதலால் அநீதியான யுத்தத்தை எதிர்ப்பதும் நிறுத்துமாறும் கோருவது நியாயமானதாகும்.

யுத்தம் நிறுத்தப்பட்டு முடிவுக்கு கொண்டுவரப்படுவதற்கு யுத்தத்திற்குக் காரணமான தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். தீர்வு மக்கள் சார்பானதாக பாதிக்கப்பட்ட மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும். கடந்த காலங்களில் தீர்வுக்கான முயற்சிகள் நியாயமானவையாக இருக்க வில்லை. முன்வைக்கப்பட்டவை மீது மக்களுக்கு திருப்தியோ நிம்மதியோ ஏற்பட வில்லை. தீர்வு என்ற பெயரில் ஏமாற்றுக்களே திணிக்கப்பட்டன. அடிப்படைப் பிரச்சினைகளைத் தொட்டு நிற்கக் கூடியதான தீர்வே யுத்தத்திற்கு இறுதி முடிவைக் கொண்டு வரக் கூடியதாகும். இதனைச் சகல தரப்பு மக்களும் உணருகிறார்கள். ஆனால் தங்களால் தான் எதுவும் ஆகக் கூடியது எனக் கர்வம் கொண்டு அலைந்து பேரினவாதம் பேசுவோரால் மக்கள் விரும்புவதைக் கொடுக்க முடியவில்லை. ஆளுவோராகவும் அந்நிய ஆதிக்க சக்திகளை அரவணைப்போராகவும் அவர்களே விளங்குவதால் நியாயமான தீர்வு ஏற்பட முடியவில்லை. உள் நாட்டின் ஆளும் அதிகார வர்க்கமும் வெளிநாட்டு ஆதிக்க சக்திகளும் தத்தமது உள்ளார்ந்த நலன்களைப் பாதுகாப்பதற்கு தேசிய இனப் பிரச்சினையை தக்கவாறு பயன் படுத்தி வந்துள்ளன. இன்றும் அதுவே நடைபெறுகின்றது.

இன்று உலகில் எண்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் உள்நாட்டு யுத்தங்கள் இடம் பெறுவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை மூன்றாம் உலக் நாடுகளில் இன, மத, மொழி பிரதேச உரிமைகள் கோரி நடைபெறும் யுத்தங்களாகவே காணப்படுகின்றன. கொலனித்துவ வாதிகளினால் ஊன்றப்பட்ட நச்சு விதைகளின் வளர்ச்சியே இன்றைய உள்நாட்டு யுத்தங்களின் அடிப்படை. அந்தந்த நாடுகளில் காணப்பட்ட இன, மத, மொழி பிரதேச முரண்பாடுகள் ஆரம்ப நிலையில் சகோதர முரண்பாடுகள் என்ற நிலையில் தீர்வு கண்டுகொள்ள

> ***ஏகாதிபத்தியவாதிகளும் உள்நாட்டு ஆளும் அதிகார சக்திகளும் தோற்கடிக்கப்படாத வரை யுத்தத்திற்கான அடிப்படைகள் இருந்தே தீரும். தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கும் நிரந்தர சமாதானத்திற்கும் பொது எதிரி அடையாளம் கண்டு தோற்கடிக்கப்பட வேண்டும்.***

முடிந்திருக்கும். ஆனால் கொலனித்துவ வாதிகளின் உள்விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த உள்நாட்டு ஆதிக்க சக்திகள் சகோதர முரண்பாடுகளை பகை முரண்பாடகளாகவே வளர்த்துக் கொண்டனர். உரிமை கோரி நின்ற மக்கள் மீது மோசமான அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்துக் கொண்டனர். அம் மக்கள் சார்பாகப் போராடிய சக்திகள் மீது காலத்திற்குக் காலம் பழிசுமத்தி பெயர்கள் வழங்கி மக்கள் போராட்டங்களை நசுக்கியே வந்தனர். ஆனால் அவற்றை ஒழிக்கவோ அடக்கவோ முடியவில்லை.

இத்தகைய அடக்குமுறை அதிகார சக்திகளுடன்தான் அமெரிக்காவும் மேற்குலகமும் கைகோர்த்து நின்ற ஊக்கமளித்து தமது நலன்களைப் பாதுகாத்து விரிவாக்கிக் கொண்டனர். தமது ஆயுத உற்பத்திக்கான சந்தைகளாக மூன்றாம் உலக நாடுகளின் உள்நாட்டு யுத்தங்களைப் பயன் படுத்திக் கொண்டனர். தத்தமது நாடுகளை சகோதரர்களாக இருந்து வளப்படுத்த வேண்டிய கரங்கள் ஆயுதங்கள் கொண்டு யுத்தமுனைகளைத்திறந்து ஒருவரை ஒருவர் அழிக்கும் நிலையை வளர்த்துக் கொண்டனர். தத்தமது வர்க்க நிலையை மறந்து குறுகிய இனமத மொழி முழக்கங்களில் கட்டுண்டு கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு சாதாரண மக்கள் இரையாகினர். ஏகாதியத்தியமும் ஆளும் வர்க்க சக்திகளும் இவ்வாறு உழைக்கும் வர்க்க சக்திகள் தமக்கு எதிராக வர்க்கப் போராட்டப் பாதையில் அணி திரள்வதை வெற்றிகரமாகத் திசை திருப்பிக் கொண்டனர். தமது பொது எதிரித் தோற்றத்தை மறைத்துக் கொண்டனர். தாங்கள் எத்தகைய யுத்தத்திற்கும் காரணமானவர்கள் அல்லர். என்பதற்கான திரையை விரித்துக் கொண்டனர். யுத்தத்திற்கான முழுப் பொறுப்பையும் பழியையும் மக்கள் மீது சுமத்திக் கொண்டனர்.

கடந்த காலத்தில் எதிலும் சம்மந்தப் படாத புனிதர்கள் போன்று சமாதானத் தூதர்களாகத் தம்மைக் காட்டிக் கொண்டு தீர்வு சமாதானம் என உச்சரித்துக் கொண்டு வந்து நிற்கின்றனர். ஆனால் இவர்களது சமாதான நிலைப்பாடு நேர்மையானதா ? யுத்தத்திற்கு ஒரு இடைவேளை ஏற்படுத்த விரும்புகிறார்களா ? அல்லது நிரந்தரமாகவே மக்களுக்கு ஒரு சமாதான சூழலை வழங்க முற்படுகிறார்களா ? இவர்கள் நிச்சயம் நிரந்தர சமாதானத்திற்கு வழி திறப்பவர்கள் அல்லர். அது அவர்களது ஏகாதிபத்திய வாழ்வுக்கு உகந்ததாக இருக்க முடியாது. ஏனெனில் யுத்தத்தில் உயிர் வாழ்வதே ஏகாதிபத்தியம் இந்த உண்மையை இலங்கை மக்கள் உணர்ந்து கொள்ளாத வரை இந்நாட்டில் யுத்தம் முடிவுக்கு வர மாட்டாது. சமாதானம் வரவேண்டுமானால் ஒடுக்கு முறைக்கு உள்ளாகி நிற்கும் தமிழ்த் தேசிய இனம் உட்பட சகல தேசிய இனங்களுக்கும் சமத்துவமான உரிமைகள் வழங்ககப்படுவதே நிரந்தர சமா தானத்திற்கான ஒரே வழியாகும். ஆனால் இன்றைய ஆட்சி அரங்கில் உள்ள இரு பெரும் கட்சிகள் நிரந்தர சமாதானத்திற்கு வழி காணப்போவதில்லை. அவர்களது நிலவுடமை முதலாளித்துவ ஏகாதியபத்திய சார்பு நிலைப் பாடு அதற்கு இடம் அளிக்க மாட்டாது. பெரும்பான்மை யான சிங்கள உழைக்கும் மக்கள் இந்த உண்மையைப் புரிந்து அதற்கு மாற்று வழியில் சிந்தித்து செயல்பட முன்வரல் வேண்டும். பேரினவாத மாயையில் இருந்து விடுபடுவதே சரியான வழிமுறை யாகும். அவ்வாறே தமிழ்த் தேசிய இனம் உட்பட ஒடுக்கு முறைக்குள்ளான தேசிய இனங்கள் தமது போராட்டத்தை வர்க்கப் போராட்டப் பாதையில் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தளமாக மாற்ற வேண்டும். தேசியவாத எல்லைகளைத் தாண்டிய பரந்த போராட்டமே இன்றைய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து தீர்வையும் சமாதானத்தையும் நிரந்தரமானதாக மாற்றும் வல்லமை கொண்டதாகும்.

**வெகுஜனன்**

○○○

நன்றி - நூலகத்திட்டம்



# ஆறுமுகமும் ஐந்து அதிருப்தியாளர்களும்

**சௌ**மியமூர்த்தி தொண்டமானின் மறைவுக்குப் பிறகு இ.தொ.கா. வின் வாரிசு வழிமுறைத் தலைவராக அவரின் பேரன் இராமநாதன் ஆறுமுகம் பொறுப்பேற்றுக் கொண்டார். மறைந்த தொண்டமானின் அமைச்சுப் பதவியும் பதவி விலகிய பிரதியமைச்சர் சந்திரசேகரத்தின் அமைச்சும் அவரிடம் கொடுக்கப்பட்டன. உப தலைவர்களாகவும் பா. உறுப்பினர்களாகவும் இருக்கும் பி.பி. தேவராஜ், எஸ். சதாசிவம் ஏ.எம்.பி. ராஜன், சென்னன், இராஜரட்னம் ஆகியோர் அவருடன் அதிருப்தியடைந்து முரண்பட்டு நிற்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களை அங்கத்தினர்களாக கொண்டிருந்தாலும் அதன் ஸ்தாபன வடிவமும், கொள்கையும், தலைமையும் முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ தன்மைகளை கொண்டிருக்கின்ற போது ஒரு ஸ்தாபனத்துக்கு ஏற்படும் பலவீனம் இ.தொ.கா.விற்கு மட்டும் ஏற்படாதிருக்க முடியாது. 1950 முதல் தொடர்ந்து பல பிளவுகளும் உடைவுகளும் ஏற்பட்டுள்ளன. அஸிசின் உடைவு, வெள்ளையனின் வெளியேற்றம், சந்திரசேகரனின் விலகல், செல்லச்சாமியின் பிளவு என்பவற்றை முக்கியமான உடைவுகளாகவும் பிளவுகளாகவும் கொள்ள முடியும்.

எல்லாத்துறைகளிலும் முதலாளித்துவ சமூகத்தின் தேவை கருதி ஒரு தனியமைப்புக்கும் தனிநபருக்கும் ஆகக்கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கப்படுவதுண்டு. குறிப்பாக அரசியலிலும் தனிநபர்கள் வணக்கத்திற் குரிய வர்களாக ஆக்கப் படுவதுண்டு.

இ.தொ.கா. என்பது ஆகக்குறைந்தது முதலாளித்துவ சமூக மொன்றில் இணங் கக்கூடிய விஞ்ஞா னபூர்வமான ஸ்தாபன வடிவத்தை கொண்டிருக்க வில்லை. அதற்கு காரணம் அதன் தலைமையின் நிலபிரபுத்துவதன்மை தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருவதாக இருக்கலாம்.

ஆனால் அடக்கப்படுகின்ற தொழிலாளர் வர்க்கத்திற்கு தலைமை கொடுக்கும் தொழிலாளர்வர்க்க உணர்வில்லாவிடினும் அதன் தேவைகளை அறிந்து ஸ்தாபனப்பட்ட தோட்டத் தொழிலாளர் சக்தியை தனது சாதுரியத்தினால் தனது கட்டுப்பாட்டில் சௌ. தொண்டமான் வைத்திருந்தார் என்பது உண்மையே. ஸ்தாபனப்படுத்தப்பட்ட தொழிலாளர் வர்க்க சக்தி அதன் வளர்ச்சிக்காகவும் விடுதலைக்காகவும் பயன்படுத்தப்படலாம். வர்க்கத்தின் இருப்பிற்காகவும் தேவைக்காகவும் பயன்படுத்தப்படலாம். சௌ. தொண்டமானின் காலத்தில் அவருக்கு பின்னால் இருக்கும் தொழிலாளர் வர்க்க சக்தியினால் உந்தப்பட்டு ஆளும் வர்க்கத்துடன் சில முரண்பாடுகளை அவ்வப்போது ஏற்படுத்திக் கொண்டனர். அம் முரண்பாடுகள் தொழிலாளர் வர்க்கத்தின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டதாக தென்பட்டாலும் அவற்றினூடாக ஆளும்வர்க்கத்துடன் தனது அரசியல் இருப்பிற்கான பேரப்பேச்சை பலப்படுத்துவதற்காவே பயன்படுத்தி வந்திருக்கிறார். உதாரணமாக சம்பள உயர்வு போராட்டங்களை உயர்ந்த பட்ச கோரிக்கைகளுடன் ஆரம்பித்து ஆகக்குறைந்ததற்கும் கீழான நிலைப்பாட்டில் சமரசம் செய்துள்ளார். இது ஒரு முறை அல்ல பலதடவைகள் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

ஆனால் சௌ. தொண்டமானின் இறப்பிற்குப் பிறகு தலைமை பொறுப்பை எடுத்துக் கொண்ட ஆறுமுகத்தின் தலைமைத்துவம் சம்பள உயர்வு கோரிக்கையிலேயே வெளிச்சத்திற்கு வந்துவிட்டது. சம்பள உயர்வு போராட்டம் நடைபெறுவதற்கு முன்னரேயே சம்பள உயர்வு கேட்பது நியாயமற்றது என்று யட்டியாந்தோட்டை சப்புமல்கந்த தோட்டத்தில் தொழிலாளர்கள் மத்தியில் உரையாற்றும்போது குறிப்பிட்டிருந்தார்.

தொழிற்சங்கங்கள் ரூபா. 150/= வை தோட்டத் தொழிலாளர்களின் ஒரு நாள் சம்பளமாக தரவேண்டுமென ஆரம்பத்தில் கோரிக்கை விட்டிருந்தன. பிறகு இ.தொ.கா. திடீரென ரூபா. 125 ஐ கேட்டு ரூபா 123 இற்கும் இறங்கி விட்டது. அத்தோடு ஒரு தொழிற்சங்கத் தலைவர் தோட்டக் கம்பெனிகளுடன் ஏற்கனவே மிகவும் குறைந்த சம்பளத்திற்கான இணக்கத்தினை தெரிவித்திருந்ததாகவும் செய்திகள் வெளியாகி இருந்தன.

அதேபோன்று இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டபோதும் மலையகத் தமிழ்மக்கள் சார்பில் இ.தொ.கா. யோசனைகளை முன்வைப்பதில் அக்கறை செலுத்தவில்லை.

இவ்வாறாக தொழலாளர்களின் உரிமை கோரிக்கையிலும் மலையகத் தமிழர்களின் இனரீதியான அபிலாஷைகளிலும் சரியான முடிவை தலைமைத்துவம் எடுக்கத் தவறிவிட்டது என்று இ.தொ.கா. வினுள்ளிருந்து யாரும் எதிர்ப்பு கூறவில்லை. அதிருப்தியாளர்களான ஐந்து பேருங்கூட அவ்விடயத்தில் மௌனமாகவே இருந்தனர்.

அதிருப்தியாளர்களான உப தலைவர்களை அழைக்காமல் (எம்.பிக்கள்) மாவட்டத் தலைவர்களுடான சந்திப்பை ஆறுமுகம் ஏற்படுத்தினார் என்பதற்காகவும் அச்சந்திப்பில் உபதலைவர்களை நிந்தித்து பேசினார் என்பதற்காகவுமே அதிருப்தியாளர்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இ.தொ.கா. வுக்குள் ஜனநாயகம் இருக்கவில்லை என்றும் தலைமையினால் இ.தொ.கா. நிதி பிறழ்வான வழிகளில் கையாளப் படுவதாகவுமே அதிருப்தியாளர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இ.தொ.கா. வின் நிதிச்செயலாளராக இருந்த அண்ணாமலையின் பொறுப்புகள் மெல்ல மெல்ல ஆறுமுகத்திடம் ஒப்படைக்கப் பட்டபோதும் பின்னர் நிதி முற்றாகவே அவரிடம் ஒப்படைக்கப்பட்டபோதும் இந்த அதிருப்தியாளர்களும் வாய்மூடி மௌனமாகவே இருந்தனர்.

இ.தொ.கா. விலிருந்து பெ. சந்திரசேகரன் வெளியேற்றப்பட்ட போதும் இந்த ஐவரும் ஜனநாயக மீறல் பற்றி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவையெல்லாம் காலஞ்சென்ற சௌ. தொண்டமானின் தலைமையின் கீழ் நடைபெற்றன.

சௌ. தொண்டமானின் காலத்தில் நிதியாள்கை பற்றியும் ஜனநாயக விரோத நடவடிக்கை பற்றியும் கேள்வி எழுப்பப்படாதபடியால் தற்போதும் மௌனமாக இருக்க வேண்டியது நியாயப்படுத்தப்பட முடியாது. ஆனால் அதிருப்தியாளர்கள் எந்த தளத்திலிருந்து எவ்வகையான விமர்சனங்களை தலைமை மீது வைக்கின்றறனர் என்பது முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அவர்கள் அவர்களது நன்மை என்ற போக்கிலிருந்தே இ.தொ.கா.வின் தற்போதைய ஆறுமுகத்தின் தலைமையின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் கூறப்படுகின்ற நிதிக்கையாள்கை பற்றியும் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். இவ்வாறான நிகழ்வுகளும் முதலாளித்துவ நிலப்பிரப்புத்துவ அடிப்படைகளைக் கொண்ட இ.தொ.கா. போன்ற அமைப்புகளுக்கு புதியனவல்ல அவ்வாறான முரண்பாடுகளினால் அவ்வாறான அமைப்புகள் இல்லாமல் போக வேண்டியதும் புதியனவாக கொள்ளப்படத் தேவை இல்லை.

இ.தொ.கா. விற்குள் ஏற்பட்ட முரண்பாடுகளினால் இ.தொ.கா. சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது. சட்டபூர்வமான தன்மை செல்லச்சாமியின் கையில் இருக்கிறது. நிர்வாக சபையோ பொதுச்சபையோ கூடமுடியாதிருக்கிறது. தொழிலாளர் வர்க்கத்திற்கு முதலாளித்துவ வர்க்கமோ நிலப்பிரபுத்துவ வர்க்கமோ தலைமை எடுக்கும் போது ஏற்படும் முரண்பாடுகளால் முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ வர்க்க தலைமை கூறு கூறாக உடைவதும் தொழிலாளர் வர்க்கம் அதனது தலைமையை உறுதி செய்வது என்பது இயலாத ஒன்றாகியது. முதலாளித்து நிலப்பிரப்புத்துவ தலைமையை கொண்ட அமைப்பிற்குள்ளும் மேற்படி முரண்பாடுகள் கூர்மையடைவதும் அமைப்பிற்கு வெளியிலிருந்து முரண்பாடுகள் தோன்றி கூர்மையடைவதையும் பார்க்க முடியும்.

இந்த நிலைமையே இன்று இ.தொ.காவிற்கு ஏற்பட்டுள்ளது. அதாவது தொழிலாளர் வர்க்க விரோத தலைமையான இ.தொ.கா.விற்கு வெளியிலிருந்து தொழிலாளர் வர்க்க நிலைப்பாட்டில் எதிர்ப்புகளும், முரண்பாடுகளும் தொடர்ந்து வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அதே போன்று உள்ளேயும் அவ்வாறான முரண்பாடுகள் வளர்ந்து கொண்டேதான் இருந்தன. அதனால் முதலாளித்துவ, நிலப்பிரப்புத்துவ் அடிப்படையை கொண்ட தலைமைகள் பலவீனமடைந்தே இன்றைய நிலை ஏற்பட்டுள்ளன.

இந் நிலையில் தொழிலாளர் வர்க்கம் தொடர்ந்தும் அம்முரண்பாடுகளில் ஏதாவது ஒரு முதலாளித்துவ நிலப்பிரப்புத்துவ பகுதியினருக்கு ஆதரவாக் இருப்பது தேவையற்றதாகியுள்ளது. இந்நிலையில் இ.தொ.காவை தொழிலாளர் வர்க்கம் கை ஏற்று முதலாளித்துவ நிலபிரபுத்துவ தலைமைகளை அப்புறப் படுத்த முடியுமா ? அல்லது மாற்று அமைப்பை முறையாக முன்னெடுக்க வேண்டுமா ? முடியுமா ? என்பது பற்றி எல்லாம் ஏனைய தலைவர்கள் எனப்பட்ட அதே முதலாளித்துவ நிலப்பிரப்புத்துவ அடிப்படையை கொண்ட வர்களால் சரியாக சிந்திக்க முடியாது.

மலையகத்தில் இருக்கும் மாக்சிஸ்ட் லெனினிஸ்ட்டுகளே அப்பொறுப்பை கையேற்க வேண்டியிருக்கிறது. அதாவது முதலாளித்துவ நிலப்பிரப்புத்துவ தலைமைகளுக்குள்ளான முரண்பாடுகள் கூர்மையடைந்த தொழிலாளர் வர்க்கத்திற்கு தெளிவான ஒரு தளத்தை ஏற்படத்தியுள்ளன. அதனை பயன்படுத்தும் வல்லமை தொழிலாளர் வர்க்கத்தின் உண்மையான தலைமைகளுக்கு ஏற்பட வேண்டும். முதலாளித்துவ நிலப்பிரப்புத்துவ தலைமைகளின் உடைவைக் கண்டு தொழிலாளி வர்க்கம் திகைப்பதை விட மாற்றுத் தலைமையைத் தோற்றுவிக்க முன்வரல் வேண்டும்.

**ம. அழகேசன்.**

## தொண்டமான் காலத்திலேயே ஜனநாயகம் இல்லை. ஆறுமுகத்தின் தலைமையில் எப்படி வரும் !

# பாராளுமன்றத் தேர்தலும் மலையக மக்களும்

இ.தொ.கா. எம். பிக்களிடையே ஏற்பட்டுள்ள பிளவில் பி.பி. தேவராஜ், எஸ் சதாசிவம் ஏ.எம்.டி. ராஜன் ரி.வி. சென்னன. எஸ் இராஜரட்ணம் ஆகியோர் தனியாக இயங்குவதற்கு முடிவு செய்துள்ளர். இதனால் இ.தொ.கா.வில் ஏற்பட்டுள்ள விரிசல் கூடியவிரைவில் தீர்க்கப்படக் கூடியதாக இல்லை. இந்த நிலைமையில் எதிர்வரும் தேர்தலில் மலையகத்தமிழ் மக்களின் பெரும்பாண்மை வாக்குகளை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு பெற்றுக் கொடுக்கும் உறுதிப்பாட்டுடன் ஆறுமுகம் தொண்டமானின் தலைமை இல்லை. அத்துடன் மேற்குறிப்பிட்ட 5 எம் பிக்களும் ஐ.தே. கட்சியின் மீது அனுதாபம் கொண்டவர்களாகவே ருந்து வருகின்றனர்.

இ.தொ.கா. செயலாளராக இருந்த எம். எஸ். செல்லச்சாமியும் ஐ.தே.க. வுடனேயே இருக்கிறார். ம.ம. முன்னணியின் தலைவரான பி. சந்திரசேகரமும் ஐ.தே.க. வுடனேயே அவரின் உறவை வலுப்படுத்தியிருக்கிறார். வி. புத்திரசிகாமணி எம். பும்அவரின் நிலையைப் பலப்படுத்தி வருகிறார். தொ. தே. சங்கமும் ஐ.தே. கட்சியுடனேயே இருக்கிறது. இதனால் ஆறுமுகம் தொண்டமான், யோகராஜன், சிவலிங்கம் ஆகிய எம்.பிக்கள் மலையகத்தமிழ் மக்களிடையே பொதுஜன ஐக்கிய முன்னணியை செல்வாக்குடையதாக தொடர்ந்து வைத்திருக்க முடியுமா ? அதேவேளை ஐ.தே. கட்சிக்கு பெரும் ஆதரவு கிடைக்குமா இல்லையா என்பது'பற்றிய ஐயமும் இல்லாமல் இல்லை. ஏனெனில் தற்போது ஐ.தே. கட்சியை நியாயப்படுத்தும் மலையகத் தலைவர்கள் எனப்படுபவர்கள் யாவரினதும் அரசியல் நேர்மை குறித்த கேள்வி மலையகத்தமிழ் மக்கள் மனங்களில் எழுந்து கொண்டேயிருக்கிறது. தங்களது பதவிகளுக்காக ஒரு பேரினவாத முதலாளித்துவ கட்சியை நியாயப்படுத்தும் போக்கு மலையக அரசியலில் இம்முறை ஒரு இக்கட்டான நிலையை அடையலாம்.

ஐ.தே. கட்சியினுடைய பேரினவாதப் போக்கு முதலாளித்துவ வர்க்க நலன் என்பன முன்னையை விட இன்று மலையகத்தில் நன்கு வெளிச்சத்திற்கு வந்துள்ளன. அதாவது தொழிற்சங்க இயக்கப் பலன் குறைவடைந்துள்ள போதும் மலையகத்தமிழ் மக்களிடையே விடயங்களை நோக்குவதில் பலவீனம் ஏற்பட்டிருப்பதாக கூறமுடியாது.

பொதுஜன ஐக்கிய முன்னணி பற்றிய தெளிவு ஏற்பட்டிருப்பதால் முன்பு போன்று மலையக தொழிற்சங்க மொன்றின் ஒப்பந்தமுறைக்குள் மாட்டுப்பட்டு அதனை ஆதரிப்பார்கள் என்றும் எதிர்பார்க்க முடியாது. அத்துடன் வழமையான முதலாளித்துவ தேர்தல் திருகுதாளங்களை செய்து பொதுஜன ஐக்கிய முன்னணியை நிலைநிறுத்த இ.தொ.கா. முன்புபோல ஒருமைப்பாட்டுடன் இல்லை. முன்பு பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆதரித்த எந்தவொரு இயக்கமு ம் இன்று அதற்கு ஆதரவாக இல்லை.

எனவே எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தல் மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அக்கறையற்ற தேர்தலாகவே இருக்கும் என்றே அரசியல் அவதானிககள் கருதுகின்றனர். அந்த அக்கறையீனத்தைப் போக்க மலையக பாராளுமன்றவாதிகள் பலமுனைகளிலும் முயற்சி செய்வார்கள் அவர்கள் தொடர்ந்தும் பதவிகளில் இருப்பதற்கான அடிப்படையிலிருந்து பலவிதமான முயற்சிகளில் ஈடுபடுவார்கள்.

**தொழிற் சங்க பம்மாத்துப்போல் பாராளுமன்ற ஏமாற்றும் அம்பலமாகியே தீரும்.**

"மலையகத் தமிழ் மக்களுக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாமல் போகக் கூடாது. அப்பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வேண்டும். அப்பிரதிநிதித்துவத்தால் இன்று மலையகம் பெரிய முன்னேற்றம் அடைந்துள்ளது." என்றெல்லம் கூறத்தவர மாட்டார்கள். அதைவிடவும் கடந்த சில வருடங்களாக அவர்களுக்கு கிடைத்துள்ள தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறுவதற்கான இரகசியங்களை பாதுகாத்து முன்னெடுப்பார்கள் என்றே எதிர்பார்கலாம். இவ்விடத்தில் ஏற்கனவே மலையகத்தில் ஸ்தாபிதமாகியுள்ள முதலாளித்துவ இனவாத கட்சிகளை நிராகரித்து மலையகத் தமிழ் மக்களின் இன வர்க்க நலன்களை பாதகாப்பதற்கான முயற்சிகள் முன் செல்வதற்கு வாய்ப்புகள் அதிகமுண்டு. மலையகத்தமிழ் மக்களின் உரிமைகளை 'தற்போதைய பேரினவாத முதலாளித்துவ முறைமைக்குள் தீர்ப்பதற்கு வழிவகைகள் இருப்பதாக கூறப்படும் பித்தலாட்டக் கருத்துகள் செல்லுபடியாகாமல் போவதற்கான வர்க்க அரசியல் மயப்பட்ட பிரசாரங்கள் பலப்படுத்தப்பட வேண்டும்.

தொழிற்சங்கவாத பம்மாத்துக்களால் பலவீனப்படுத்தப் பட்டுள்ளது போன்று பாராளுமன்றப் பம்மாத்துக்களும் பலவீனப்படுத்தப் பட்டேதீரும். அதற்கான பாராளுமன்ற தேர்தலாக எதிர்வரும் தேர்தல் மலையத்தில் அமையுமாயின் மலையகத்தமிழ் மக்கள் திருப்தியடைய முடியும்.

•••

## பணமோசடிகள் வெளிவருகின்றன !

இ.தொ.கா. மலையகத் தொழிலாளர்களிடமிருந்து சந்தாவாக அன்பளிப்பாகப் பெற்ற பணம் கோடிக்கணக்கானதாகும். அதற்கான வரவு செலவு விபரம் இதுவரை பூரண இரகசியமாகவே இருந்து வந்தது. இப்போது ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அதிர்ச்சி தரும் கணக்கு விபரங்கள் வெளியே வந்து கொண்டிருக்கின்றன. தலைமைக் காரியாலயம் எட்டுக் கோடி ரூபாய்க்கு வங்கியில் அடைமானம் வைக்கப் பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. யாருடைய பணம் யார் அனுபவிக்கிறார்கள். இன்னும் எத்தனை புரட்டுக்கள் வெளிவர உள்ளனவோ தெரியாது. இப்படியே தலைவர் ஆறுமுகமும் உப தலைவர்கள் ஐந்து பா. உ. க்களும் பரஸ்பரம் கணக்கு கேட்டு சொத்து விபரம் சந்திக்கு வந்துவிடப் போகின்றது என சில இ. தொ. கா. அபிமானிகள் அஞ்சுகின்றனர். ஆனால் இதுவரை மறைக்கப்பட்ட பல உண்மைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இ.தொ.கா. வின் பண விவகாரங்களும் கணக்கு கேட்டு நிற்பதும் தமிழ் நாட்டு அரசியல் பாணியில் சென்று கொண்டிருக்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# அண்ணன் காட்டிய வழி (2)

## ஒரு வாரிசு உருவாகிறது


தமிழரசுக் கட்சிக்குள் சொத்துச் சண்டையும் நடந்தது. குடும்பத் தலைவன் பதவிக்கான மோதலும் நடந்தது. 1961ம் ஆண்டுச் சத்தியாக்கிரகம் நனைந்த அப்பளம் மாதிரித் தானாகவே அமுங்கிப் போன பின்னர் தமிழரசுக் கட்சியின் தலைமை தடுமாறத் தொடங்கியது. சாத்வீகப் போராட்டம் என்பது பாராளுமன்றப் போராட்டமாகவே ஒடுங்கிவிட்டது. இந்தியாவின் விடுதலையை காந்தி சத்தியாக்கிரகம் செய்து வென்றெடுத்தார் என்று பாடப்புத்தகங்களில் எழுதி வைத்ததை விவரம் அறிந்த பள்ளி மாணவன் கூடக் கேள்விக்குட்படுத்தத் தொடங்கிய காலத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அதைப்பற்றி அறியாமல் இருந்தார்கள் என்று கூறுவது கடினம். எனினும் சத்தியாக்கிரகம், அகிம்சை வழி போன்ற பொய்கள் அவர்கட்கு அவசியமாக இருந்தன.

அகிம்சைப் போராட்டமாயினும் ஆயுதப் போராட்டமாயினும் போராளிகளிடம் தியாக மனப்பான்மையும் கொள்கைப் பிடிப்பும் இல்லாமல் எதையுமே வெல்ல முடியாது. தமிழரசுக் கட்சியின் போராட்டச் செம்மல்கள் எல்லாரும் பணாகொட ராணுவ முகாமில் 1961ல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட காலத்திலே அவர்களுடைய அரசியல் மேடை வீர முழக்கங்கட்கும் வாழ்க்கை நடைமுறைக்கும் உள்ள உறவு ஆளுக்காள் தெளிவாயிற்று. எக் காரணங் கொண்டோ அரசாங்கம் செல்வநாயகத்தை அவரது கொள்ளுப்பிட்டி வீட்டிலேயே தடுப்புக்காவலில் வைத்தது. ஈழத்துக் காந்தியாரும் இல்லை நான் என் தொண்டர்களுடனே தான் போயிருப்பேன் என்று ஆட்சேபிக்கவும் இல்லை. அவர் பணாகொடைக்குப் போயிருந்தால் குடும்பச்சண்டையில் அவரும் இழுபட்டிருப்பாரோ தெரியாது. எனினும் தனது வாரிசுகளின் தன்மையையும் தகுதியையும் நேரில் கண்டறியும் வாய்ப்பை அவர் இழந்து விட்டார்.

சட்டத்துறையில் வருமானத்தைப் பெறுவந்த தமிழரசுக்கட்சி வழக்கறிஞர்கள் பலர் எப்போது வெளியே வந்து தமது தொழிலில் வட்டியும் முதலுமாகச் சம்பாத்தியம் பண்ணலாம் என்று ஏங்கத் தொடங்கி விட்டனர். இதற்கான முயற்சிகள் அவர்களுக்கு நெருக்கமானவர்கள் மூலம் எடுக்கப்பட்டு அவர்களது சார்பிலான வாக்குறுதிகள் மூலம் வெளியே வருகிற முயற்சிகள் பணாகொடை முகாமிற்குள்ளேயே பிரசித்தமாகி விட்டன. (இதில் முக்கியமான ஒரு பின்னாள் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற அரசியல் பிரமுகரும் அடக்கம்). இதற்குள் அமிர்தலிங்கம் - ராஜதுரை மோதல் வலுக்கத் தொடங்கிவிட்டது. இதற்குச் சில தனிப்பட்ட காரணங்கள் சிலரால் கூறப்பட்ட போதும் அமிர்தலிங்கத்தால் கட்டுப்படுத்த முடியாதளவுக்குப் ராஜதுரை கிழக்கு மாகாணத்தில் தனக்கென்று ஒரு தளத்தை அமைத்துக் கொண்ட ஒரு காரணமாகும் என்பது பணாகொடையில் இருந்த சிலரது உறுதியான அபிப்பிராயம். பணாகொட முகாம் அன்று எந்த விதமான வதைகளோ கொடுமைகளோ இல்லாத ஒரு வசதியான விடுதியாக இருந்தது. வெளி உலகுடனான தொடர்புக்கு இருந்த கட்டுப்பாடும் மெல்ல மெல்லத் தளர்த்தப்பட்டது. இன்றைய கொடுஞ் சிறைச்சாலைகளால் சாதிக்க முடியாததை அன்றைய ஆட்சி ஒரு சொகுசு முகாம் மூலம் சாதித்தது என்பதில் கொஞ்சம் உண்மை உண்டு. பணாகொட வாழ்க்கை முடிந்து வெளிவந்த பிறகு சாத்வீகப் போராளிகளின் சாத்வீகமும் சகிப்புணர்வும் 'சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு' எதிரானதே ஒழியத் தம்மிடையிலான மோதல்கட்குப் பொருந்தாதது என்பதும் கொஞ்சம் வெளிச்சமாகி விட்டது.

அமிர்தலிங்கம் செல்வநாயகத்தின் மீதான செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கான ஒரு மாற்று மொழியையும் கண்டறிந்தார். அது செல்வநாயகத்தின் வீட்டு விறாந்தையில் இயங்கிய 'கட்சிக்குள் ஒரு கட்சி' ஆகும். இதில் செல்வநாயகத்தின் மகன் ஒருவரும் சுதந்திரனின் பின்னர் ஆசிரியராக பணியாற்றிய ஒருவரும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பிரமுகர் ஒருவரும் வேறு சில இளைஞர்களும் இருந்தனர். சில வணிகப் பிரமுகர்களுடைய ஆதரவும் இவர்கட்கு இருந்தது. இதன் மூலம் பாராளுமன்றவாதிக்குப் பாராளுமன்றவாதியாகவும் போராட்ட உணர்வுள்ள கட்சித்தொண்டனுக்குச் கட்சித் தொண்டனுமாக வழக்குரைஞனுக்கு வழக்குரைஞராகவும் அமிர்தலிங்கம் தந்தைக்கு இனிய தனயனாக உருவாக்கம் பெற்றார்.

தமிழரசுக் கட்சிக்குள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தலைவர்களின் முக்கியம் என்றுமே பெரிதாக இருக்கவில்லை. அன்றைய பிரிக்கப்படாத மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியை ஒரு வலிய அமைப்பாகக் கட்டி எழுப்புவதில் கட்சியின் தலைமைப் பீடம் காட்டிய அக்கறை போதாது எனலாம். சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான உணர்வின் எழுச்சியின் நடுவிலும் சில சந்தர்ப்பவாதிகளால் பேரினவாத ஆட்சியாளர் சார்பில் தேர்தலில் நின்று வெற்றிபெற இயலுமாயிருந்து வந்தது. படித்த, உத்தியோகக்கார யாழ்ப்பாண வேளாள மேட்டுக்குடிப் பிரமுகர்கட்குச் சமதையான தலைவர்களை உருவாக்கி வளர்க்கும் தேவையைத் தமிழரசுத் தலைமை உணரவில்லை. ஒப்புக்காக ராஜவரோதயம், ராஜமாணிக்கம், மாணிக்கம் போன்றோரைத் தலைமைப் பொறுப்புக்களில் அமர்த்தினாலும் உண்மையான அதிகாரம் வேறெங்கோ இருந்தது என்ற உணர்வு பரவலாக



இருந்தது. செல்வநாயகத்தின் 'காந்திப்' படிமத்தின் செல்வாக்கை மட்டும் வைத்துக் கட்சியை வளர்க்க முடியாது என்பதை அறிந்தாலும் ராஜதுரையை ஓரங்கட்டுவதில் அமிர்தலிங்கம் முனைப்பாக நின்று வெற்றியுங் கண்டார். இதில் ராஜதுரையின் தனிப்பட்ட பலவீனங்களும் அமிர்தலிங்கத்துக்கு வசதியாயிருந்தன. ஆனாலும் ராஜதுரையை நீக்கி விட்டுத் தமிழரசுக் கட்சியால் மட்டக்களப்பில் வெற்றி பெற முடியாது என்பதும் அவர் அறிந்த உண்மை. இதற்கான தருணத்துக்கு 1977 வரை அவர் காத்திருக்க நேர்ந்தது. பின்னர் அது பற்றிப் பார்ப்போம்.

> **பாராளுமன்றவாதிக்கு பாராளுமன்றவாதியாகவும் போராட்ட உணர்வுள்ள கட்சித் தொண்டனுக்கு தொண்டனாகவும் வழக்குரைஞர்களுக்கு வழக்குரைஞராகவும் தந்தைக்கு இனிய மைந்தனாகவும் அமிர்தலிங்கம் உருவாக்கம் பெற்றார்.**

**இமயவரம்பன்**

செல்வநாயகத்தின் சுதந்திரனிலிருந்து விலக்கப்பட்ட எஸ்.டி. சிவநாயகம் (அண்மையில் மரணமானவர்) வீரகேசரியில் பின்னர் தினபதியில் ஆசிரியப் பொறுப்பேற்றார். அவருக்கும் ராஜதுரைக்கும் இருந்த நெருக்கமும் அவருக்குத் தமிழரசுக்கட்சி மீது உருவான பகைமையும் தமிழரசுக்கட்சிக்குள் ராஜதுரைக்கு எதிரான அபிப்பிராயத்தை வலுப்படுத்தின. சிவநாயகம் தனது பொறுப்பிலிருந்த ஏடுகளில் தமிழரசுக்கட்சிமீதான விமர்சனங்கட்கு வசதியும் ஊக்கமும் அளித்தார். பதிலுக்கு சுதந்திரன் அவர் மீது மிகவும் கீழ்த்தரமான தாக்குதலைத் தொடுத்து (சிவ நாய் அகமே என ஒருமுறை அவர் சுதந்திரனில் விளிக்கப்பட்டார்). இவ்வாறான நேரங்களில் தான் சுதந்திரன் செல்வநாயகத்தின் அதிகாரத்தில் இருந்ததா அல்லது அவர் வீட்டு விறாந்தையில் இயங்கிய குழுவின் அதிகாரத்தில் இருந்ததா என்ற கேள்வி கட்சியின் மூத்த தலைவர்கள் நடுவே எழுந்தது.

எவ்வாறாயினும் 1962-63 அளவில் அமிர்தலிங்கத்தின் எழுச்சி தடுக்க இயலாததாயிற்று. கிழக்கு மாகாணத்தில் அவருக்குத் தனிப்பட்ட முறையில் செல்வாக்கு இருந்ததாகக் கூற முடியாது. அவர் அது பற்றி அதிகம் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை. 1965ம் ஆண்டு தேர்தல் வரை குறிப்பிடத்தக்கதாகத் தமிழரசுக் கட்சி எதையுமே செய்ததாகக் கூற முடியாது. 1964ல் லேக் ஹவுஸ் நிறுவனத்தைத் தேசியமயமாக்கும் முயற்சியை முறியடிப்பதில் யு.என்.பி. சி.பி.டி. சில்வா குழுவினர், தமிழரசுக் கட்சியினர் ஆகியோருடன் சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்த எட்மண்ட் சமரக்கொடியும் இணைந்து 'பத்திரிகைச் சுதந்திரத்தைப்' பாதுகாக்கும் பணியை ஆற்றினர். இதன் விளைவாக ஸ்ரீ ல. சு. கட்சி ஆட்சி கவிழ்ந்தபோது அதில் என்.எம். பெரேரா அமைச்சராக இருந்ததும் நினைவு கூரத்தக்கது. தமிழரசுக் கட்சி ஸ்ரீ ல. சு. கட்சியை ஆட்சியில் தொடர வைக்க அரசியற் பேரம் நடத்த முற்பட்டதாகவும் அதற்கு செனெற்றர் ஏ.எம்.ஏ. அஸீஸ் உதவ முன்வந்ததாகவும் கூறப்பட்டது. ஆயினும் யு.என்.பியுடன் இரகசிய உடன்பாட்டுக்கான காரியங்களும் திரைமறைவில் நடந்து கொண்டிருந்தன. தமிழரசுக்கட்சி ஸ்ரீ ல. சு. கட்சி ஆட்சியில் தொடர உதவ மறுப்பதாக உறுதி செய்த பின்பு பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. யூ.என்.பி.யும் லேக் ஹவுஸ் நிறுவனமும் ஸ்ரீ ல.சு. கட்சியை ஒரு சர்வாதிகார, ஜனநாயக விரோதச் சக்தியாகச் சித்தரித்தன. சிரிமா பண்டாரநாயக்க தேர்தலை நடத்தாமல் விட முயன்றதாகவும் பொய்யான பிரசாரம் முடுக்கிவிடப்பட்டது.

ஸ்ரீ ல. சு. கட்சியிலிருந்து சி.பி.டி. சில்வா விலகியது, சமசமாஜக் கட்சிப் பிளவு, கம்யூனிஸ்ட் கட்சி பிளவு ஆகியன ஒருபுறமிருக்க யூ.என்.பிக்கு ஆதரவாக பிலிப்குணவர்த்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணியும் ஆர்.ஜி. சேனநாயக, கே.எம்.பி. ராஜரத்ன போன்ற இனவாதிகளும் மறைமுகமாக தமிழரசுக் கட்சியும் செயற்பட்டதன் விளைவாக யூ.என்.பியால் மீண்டும் அதிகாரத்துக்கு வர முடிந்தது.

இலங்கையில் எந்தக் கட்சி ஆளும் என்பதைத் தமிழரசுக்கட்சியே தீர்மானிக்கும் என்று தமிழரசுக் கட்சித் தலைமை கொக்கரித்தது. ஆனாலும் உண்மையில் 1965ம் ஆண்டுத் தேர்தலில் அது முன்னை விடக் சிறிது குறைவான வெகுசன ஆதரவையே பெற்றது. இத் தேர்தல் முடிவுகள் தமிழரசுக் கட்சிக்கு ஒரு புதிய வாய்ப்பை ஏற்படுத்தியது. அந்த வாய்ப்பைத் தமிழரசுத் தலைமை உள்ளூர மகிழ்வுடன் விரும்பி வரவேற்றது.

யூ. என். பியின் ஏழு கட்சிக் கூட்டணியில் தமிழரசுக் கட்சி பங்கு பற்றியதோடு ஒரு அமைச்சர் பதவியையும் ஏற்க கடன்பட்டது. அமைச்சர் பதவிக்காத் தமிழரைக் காட்டிக் கொடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஜி.ஜி. பொன்னம்பலத்தின் தலைமையிலான தமிழர் காங்கிரஸ"டன் ஒரே அரசாங்கத்தில் இருப்பது பொன்னம்பலத்தை எட்டப்பன் காக்கை வன்னியன் என்றெல்லாம் ஏசியவர்களுக்குச் சிலகாலமே சங்கடத்தை ஏற்படுத்தியது. பின்னால் அந்தப் புதிய உறவு பழக்கப்பட்டு விட்டது.

செல்வநாயகம் அமைச்சர் பதவியை ஏற்க விரும்பாததற்கு அவருடைய 'கொள்கைப் பிடிப்பு' காரணமாகக் கூறப்பட்டது. ஆனால் அவரது உடல்நிலையும் அதற்கு ஒரு காரணமாக இருந்தது. எப்படியும் தனக்கு ஏற்ற ஆளான மு. திருச்செல்வத்தை அமைச்சராக்கிக் 'கொள்கையையும்' மந்திரிப் பதவியையும் ஒரேகாலத்தில் தக்க வைத்தக் கொள்ள அவர்கட்கு முடிந்தது. அமிர்தலிங்கம் விரும்பியிருந்தாலும் அமைச்சராக முடியாத விதமாக அவருக்கு எதிரான உணர்வுகள் கட்சித் தலைமைக்குள் தொடர்ந்திருந்தன. அவரை அமைச்சராக்கிக் கட்சியைப் பிளவுபடுத்த செல்வநாயகம் விரும்பாததும் திருச்செல்வத்துக்கு வசதியாகியது எனலாம்.

1965 - 1969 காலத்தில் தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்றத்தில் அரசாங்க வாங்குகளில் இருந்த காலத்திலேயே வடஇலங்கையிலும் சர்வதேசத் தளத்திலும் தமிழரசுக் கட்சியின் சமூகப்பார்வையையும் வர்க்க நிலைப்பாட்டையும் தோலுரித்துக் காட்டும் விதமான நிலைமைகள் உருவாகின. உணர்ச்சிமிக்க கிளர்ச்சிக்கார இளைஞராக அடையாளங்காட்டி எழுச்சிபெற்ற அமிர்தலிங்கம் அடக்குமுறை ஆட்சியாளர்களது குரலாக ஓங்கி ஒலித்த கால இடைவெளியும் இதுவே.

♦♦♦

# தேசியம்

ஈழத் தேசியம் பற்றிப் பேசுகிற போது, சங்கிலியன் காலத்துடன் ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியைக் காணும் பழக்கம் இன்னமும் இருக்கிறது. இன்று நமக்கு முன்னால் உள்ள தமிழ்த் தேசியம், சிங்களப் பேரினவாதத்தின் விளைவாக உருவானது எனலாம். இதன் தோற்றத்திற்குத் தமிழ் அதிகார வர்க்கத்தின் நலன்களுக்கும் சிங்கள அதிகார வர்க்கத்தின் நலன்கட்கும் இடையில் இருந்து வந்த முரண்பாடுகளின் பங்களிப்பு முக்கியமானது. ஆயினும், தமிழர் என்ற அடையாளம், அண்மை வரை, ஒரு தேசிய அடையாளமாக இருக்கவில்லை. தமிழ் மக்களுக்குரிய பலவேறு சுய அடையாளங்கள் நெடுங்காலமாக இருந்து வந்தவை தான். யாழ்ப்பாண வேளாள மேட்டுக்குடிகள் தமது நலன்களைத் தமிழர் என்ற அடையாளத்தின் பேரில் பேணி வந்த போது, அது தன்னளவிலேயே தேசியத் தன்மை பெறவில்லை. அதிகார வர்க்கங்களிடையிலான போட்டி, சிங்களப் பேரினவாத அரசியல் மூலம் இன ஒடுக்கலாக விருத்தி பெற்றதன் மூலமே, தமிழர் என்ற அடையாளம் தனக்கான தேசியத் தன்மையைப் பெற்றது. இன்னமும் மலையகத் தமிழரையும் முஸ்லிம்களையும் இந்தத் தேசத்திற்குட் பொருத்துவது தொடர்பாக உள்ள குழப்பங்களும் முரண்பாடுகளும் தேசம் என்பது இயல்பான ஒரு மனித இருப்பல்ல என்பதையே நமக்கு வலியுறுத்தியது. தேசம் என்பது வரைவிலக்கணங்களாலன்றி வரலாற்று நிர்ப்பந்தங்களாலேயே உருவாகிற ஒன்று என்பதை நாம் மீண்டும் மீண்டும் காண்கிறோம்.

நல்ல தேசியம் - கூடாத தேசியம், முற்போக்கான தேசியம் பிற்போக்கான தேசியம் என்றவாறான கருத்துக்கள், உண்மையில், தேசியத்தின் முரண்பாடான கூறுகளை அடையாளங் காட்டுவனவே யொழியத் தேசியத்தை வகைப்படுத்தும் வேறுபாடுகளல்ல. ஏனெனில், தேசியம், ஒருபுறம் அடக்குமுறைக்கான கருவியாகப், பிற தேசங்களின் மீது ஆதிக்கம் செலுத்திச் சிறுபான்மை இனப்பிரிவுகளின் அடையாளத்தை மறுக்கும் பண்பையுடையது. மறுபுறம், தன்னை ஒடுக்குகிற சக்திகளை எதிர்த்துப் போரிடும் விடுதலை வேட்கையையுடையது. ஒரு தேசியவாதி ஏககாலத்தில் இரு பண்புகளையும் வெளிப்படுத்தக் கூடும் என்பதை நாம் (சிங்களப் பேரினவாதத்தின்) இலங்கைத் தேசியத்திலும், தமிழ் ஈழத்

7ம் பக்கம் பார்க்க

நன்றி - நூலகத்திட்டம்



# அயலார் மீண்டும் வருவாரோ ?


## இறைமை அடைமானம் வைக்கப்படும் அபாயம்!

1987ல் இந்தியப் படைகள் இந்த மண்ணில் அடிவைக்க முன்னமே இலங்கையின் உள் விவகாரங்களில் இந்திய அரசின் தலையீடு மும்முரமாகியிருந்தது. இலங்கையின் அயற்கொள்கை, இறைமை, சுயாதீனம் என்பவற்றின் மீது இந்திய அரசுக்கு இருந்த கவனம் யாவுமே அவற்றை எவ்வாறு தனது ஆளுமைக்கு உட்படுத்துவது என்ற மட்டிலேயே இருந்தது.

இந்தியா இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையில் காட்டிய அக்கறை மிகவும் போலியானது என்பதை இந்தியாவின் தயவில் தணிக்கை 'விடுதலை' இயக்கங்களின் தலைமைகளும் அறிந்த விடயம். தமிழின விடுதலைக்கு இந்திய ஆதரவு என்பதை ஒவ்வொருவரும் தனக் கேற்றவாறு விளங்கிக்கொள்ளுமாறு இந்திய அரசின் பல்வேறு உறுப்புகள் ஆடிய கபட நாடகம் நேரடியான இந்திய ராணுவத் தலையீடு நடந்த பின்பு அப்படியே அம்பலமாயிற்று. 1987-89 காலத்தை எந்த தலைவர் மறந்தாலும் தமிழ்ப் பொதுமக்கள் மறக்க ஆயத்தமில்லை என்பது நாம் அறிந்ததே. எனினும் இந்தியத் தலையீட்டைத் தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோர் தமது நலன்கட்கு ஏற்றபடி வெவ்வேறு அளவுகட்கு விரும்புகின்றனர்.

இவர்களிற் சிலருக்கு தணிக்கை விட்டால் தணிக்கை வேறு வழியே தெரியவில்லை. அதற்காகத் தமிழ் மக்கள் அழிந்தாலும் பரவாயில்லை. இந்தியப் படைகள் வருவதை அவர்கள் மிகவும் விரும்புகிறார்கள். இதை நேரடியாகச் சொல்வோர் சிலர். மறை முகமாக அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிப்போர் சிலர். இதில் வினோதமென்னவெனில் இந்திய ராணுவத்தலையீட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் அணியில் இவர்களை விட அதிக ஆர்வம் காட்டுவோர் சிங்களப் பேரினவாத அமைப்புக்களைச் சார்ந்தோரே. இந்த மண்ணின் இந்திய மேலாதிக்கத்தை நிறுவுவதில் இவர்களுக்குள்ள ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது . இவர்களது வளர்ச்சியில் இந்திய தணிக்கை நிறுவனங்களது பங்கு என்ன ? அயலின் கைப்பாவைகளாக இயங்க முன்வந்துள்ள இந்தத் தமிழ்த் தேசியவாதிகட்கும் சிங்கள இனவாதிகட்கும் உள்ள இனப்பற்று எப்படிப்பட்டது என்று நாம் மேலும் விசாரிக்கத் தேவையில்லை.

அரசாங்கம் வேறு வழி இல்லாமல் இந்திய அரசின் ராணுவத்தலையீட்டை விரும்புகிறது என்றால், சமாதானத் தீர்வு என்ற மாற்று வழி பற்றி தணிக்கை அக்கறை இல்லை என்பதையே அது காட்டுகிறது. போர் மூலமான சமாதானம் என்ற கொள்கை, இன்று போர் மூலம் வென்ற அனைத்தையும் இழந்த ஒரு நிலையையும், பொருளாதாரச் சிதைவையுமே உருவாக்கியுள்ள சூழ்நிலையில், அரசாங்கம் இந்த நாட்டின் இறைமையையும் அடமானம் வைக்க முற்படுகிறதா என்ற கேள்வி நியாயமாகவே எழுந்துள்ளது.







மேற்கூறிய போக்கு ஏற்கெனவே இந்திய இலங்கை வர்த்தக உடன்படிக்கையின் மூலம் தெளிவான ஒன்றுதான். எனினும் அரசாங்கம் மிகவும் எதிர்பாராத ஒரு காலகட்டத்தில் இன்றைய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தேசிய இனப்பிரச்சனையைத் தீர்ப்பதில் இந்த அரசாங்கம் காட்டிய மெத்தனமான போக்கு நாட்டின் தணிக்கை ஆப்பு வைக்கிற நிலையை இன்று ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறம், யூ.என்.பியின் வேஷமும் கலைந்து விட்டது. பேச்சுவார்த்தை, சமாதானம் என்றெல்லாம் சிலமாதங்கள் முன்பு பிரசாரம் செய்த யூ.என்.பியின் தலைவர், சில வாரங்கள் முன்பு இந்தியா சென்று அரசாங்க முக்கியஸ்தர்கள் பலருடனும் பேசி வந்துள்ளார். இந்தியாவின் தலையீடு பற்றி யூ.என்.பியின் நிலைப்பாட்டுக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. இரண்டு கட்சிகளும் இந்திய மேலாதிக்கத்தின் ஆணைகளைப் பொருளாதார மட்டத்திலும் ஏற்கின்றன. இன்று இந்தியாவின் அரசியல், தணிக்கை அவை விரும்பி நிற்கின்றன.

1987ல் தமிழ் மக்களுடைய சுயாட்சிக்கு எதிரான அடிப்படையான நோக்கத்தை இந்தியக் குறுக்கீடுக்கு எதிரான போராட்டம் என்று காட்டி வன்முறைப் போராட்டத்திலும் இந்திய எதிர்ப்பு இயக்கத்திலும் இறங்கிய ஜே.வி.பி. இன்று சொல்ல முயல்வதென்ன ? நோர்வேயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை எதிர்க்க நொண்டிச் சாக்குகள் தேடிய ஜே.வி.பியை விட இனவாத வீர விதான இயக்கமே பரவாயில்லை என்று தமிழ் மக்கள் நினைக்குமளவுக்குத் தம்மை அம்பலப்படுத்தி விட்ட ஜே.வி.பி.

**மோகன்**

இந்தியாவின் தலையீடு பற்றி ஏன் அடக்கி வாசிக்கிறது ? இந்தியாவின் மத்தியஸ்தத்தையோ ராணுவக் குறுக்கீட்டையோ எதிர்த்துப் போராட அவர்கள் ஆயத்தமாக இருக்கிறார்களா ? சிங்களப் பேரினவாதம் இந்தியக் குறுக்கீட்டை விரும்பும் வரை ஜே.வி.பி. இந்திய எதிர்ப்பில் ஈடுபட முன்வராது என்பது தெளிவு.

இந்தியாவின் 'அமைதியான' குறுக்கீட்டை ஏற்கும் நிர்ப்பந்தம் இன்று அரசாங்கத்துக்கும் யூ.என்.பி.க்கும் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேலுடனான புதிய ராஜதந்திர உறவு பற்றி எதிர்த்து வெளியேறுவதற்கு இயலாத நிலையில் அஷ்ரப் தலைமை தடுமாறுகிறது. இஸ்லாமிய விரோத இந்துத்துவ அரசு இலங்கையில் குறுக்கிட முயல்வதைப் பற்றி இத்தகைய தலைமையால் ஏதுவும் செய்ய முடியாத அவலம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் 'அமைதியான' குறுக்கீட்டை வரவேற்கிற மற்றத் தமிழ்த் தலைமைகள் அது எத்தகைய அமைதி என்று அறியாதவையா ? 1987-89 ல் தணிக்கை மூலம் சாதிக்க முடியாததை இந்தியா இப்போது அமைதி என்ற பேரில் சாதிக்க முயல்கிறது. தமிழ் மக்கள் மீதான அதிகாரத்தில் தமக்கும் ஒரு பங்கைப் பெறும் அற்ப ஆசையின் காரணமாகவே தமிழ் தலைமைகள் இந்தியத் தலையீட்டை விரும்புகின்றன.

இந்திய அரசு நோர்வேயின் அமைதிக்கான பங்களிப்பை விரும்பவில்லை என்பதற்கான சான்றுகள் தெரிகின்றன. அதை விடவும் இந்துத்துவப் பத்திரிகை நிறுவனங்களான இந்து, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற நிறுவனங்கள் விடுதலைப் புலிகளைப் பூண்டோடு ஒழிப்பது பற்றிய பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளன. இலங்கைப் பிரச்சனை இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் குலைக்கும் என்ற மிரட்டலும் விடுக்கப்பட்டுள்ளது. இவை யாவும், சிங்களப் பேரினவாதத்தின் சார்பாக இந்திய ராணுவம் இல்லாவிடினும் இந்திய ராணுவ நிபுனர்களும் அரசியல் சாணக்கியர்களும் குறுக்கிடுவதை நியாயப்படுத்துகிற முயற்சிகளே.

பாரதிய ஜனதா ஆட்சி பற்றித் தமிழ் மக்கள் நடுவே ஏற்படுத்தப்பட்ட பல மயக்கங்கள் இன்று கலைத்திருக்க வேண்டும். அரசாங்கத்தின் பங்காளிகளான ஜோர்ஜ் பெர்னான்டெஸ், கோபாலசாமி, ராமதாஸ் போன்றோரது குறுக்கீடு பாரதிய ஜனதா ஆட்சியின் போக்கை மாற்றும் என்பது வெறும் மயக்கமே. ராணுவத் தலையீட்டுக்கு எதிரான ஒரு முடிவு எடுக்கப்பட்டது என்றால், அதற்குக் காரணம் உடனடியான சூழலில் இந்திய அதிகாரவர்க்கம் ஆயுதம் ஏந்தாத ஆக்கிரமிப்பு மார்க்கத்தையே விரும்புகிறது என்பதாகும். தமிழக மக்கள் நடுவே இன்று இலங்கைத் தமிழரின் நிலை பற்றிய கோப உணர்வு மிகுந்து உள்ளது. இதுவும் கணக்கில் எடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் தமிழக முதலமைச்சர் கருணாநிதிக்கு அதைச் சமாளித்துத் திசை திருப்பும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதும் அதை அவர் ஆர்வமாக நடைமுறைப் படுத்துகிறார் என்பதும் நாம் காணக் கூடியன. இந்திய தேசிய நலன்களுக்காக இந்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகட்குத் தான் தடையாக நிற்கப் போவதில்லை. என்ற அவரது பிரகடனம் இந்த உண்மையை முதலிலேயே தெளிவுபடுத்திவிட்டது.

துரதிஷ்டவசமாக இந்தியக் குறுக்கீட்டை இந்த நாடு இன்னொரு முறை எதிர்நோக்குகிறது. பேரினவாதிகளைப் பொறுத்தளவில் தமிழ் மக்களுடைய உரிமைகளை வழங்குவதைத் தவிர்க்க இந்த நாட்டை யாருக்கும் அடமானம் வைக்கவும் அடிமைப்படுத்தவும் அவர்கள் பூரண சித்தமாகவே உள்ளனர். தணிக்கை போன்ற தமிழ் தலைவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் இந்தியாவின் உபயத்தில் தமது பெறுமதியை உயர்த்திக் கொள்ளலாமோ என ஏங்குகிறார்கள்.

இந்த நாட்டையும் அதன் சகல மக்களையும் தேசிய இனங்களையும் நேசிக்கும் சக்திகள் போரை எதிர்க்கிறார்கள். அமைதியை வேண்டுகிறார்கள். பேச்சுவார்த்தை மூலம் அமைதியான தீர்வை வேண்டுகிறார்கள். போர்நிறுத்தத்தை வலியுறுத்துகிறார்கள். அக்காரணத்தாலேயே அவர்கள் இந்திய அரசின் குறுக்கீட்டை வெறுக்கிறார்கள். இந்தியாவால் திணிக்கப்படுகிற அமைதி நிலைக்கக் கூடியதல்ல என அவர்கள் அறிவார்கள். ஏனெனில் இந்திய மேலாதிக்கச் சக்திகள் இன்று தென்னாசியா முழுவதன் மீதும் பூரண ஆதிக்கம் செலுத்த முனைப்பாக நிற்கிறது. இந்த மண்ணையும் அதன் மக்களையும் அவர்களது இறைமையையும் உண்மையாக நேசிப்போர் யார் என்பதை இந்தியத் தலையீடு பற்றிய அவர்களது நிலைப்பாடு தெளிவாக அடையாளங் காட்டும்.

அயல் ஆதிக்கம் என்பது படைகள் தாங்கியும் வரலாம், பரிசுகள் தாங்கியும் வரலாம். வரலாற்றினின்று கற்றவர்கள் தோற்றத்தைக் கண்டு ஏமாற்றமாட்டார்கள். இம் மண்ணின் மக்களிடையே ஒற்றுமை, அமைதி, நீதி, சமத்துவம் நிலைப்பதற்காகப் போர்க்குரல் எழுப்ப வேண்டிய நேரம் வந்து விட்டது. இந்திய மேலாதிக்க ஆக்கிரமிப்பை முளையிலேயே கிள்ளத் தவறினால் அதற்கான விலை மிகவும் பெரியதாகி விடும்.

●●●

***அயல் ஆதிக்கம் என்பது படைகள் தாங்கியும் வரலாம். பரிசுகள் தாங்கியும் வரலாம்.***

**வீரவிதான விரித்து வாசிக்க ஜே.வி.பி. அடக்கி வாசிக்கிறது.**

# பிராந்திய வல்லரசு ஆதிக்கம்

இந்தியா தாய் நாடென்றும் இலங்கை சேய் நாடு என்றும் தமிழர்கள் மத்தியில் நீண்டகாலமாகக் கூறப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக தமிழ்ப் பழமைவாதிகளும் அவர்கள் மத்தியில் இருந்து உருவாகிய அரசியல் தலைமைகளும் இந்த தாய் சேய் கருத்தியலைப் பரப்பி வந்துள்ளனர். இந்தியா முழுவதையும் தமிழர் தேசமாகவும் இந்துத்துவம் என்பது சைவ சமயமாகவும் ஒரு தோற்றமே காட்டப்பட்டு வந்துள்ளது.

இந்தியாவில் வாழும் தமிழர்களின் வரலாற்று ரீதியான வாழ்விடம் தென்மாநிலமாகவும் அதேவேளை குறுகிய கடல் பரப்புக்கு மறுகரையில் இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களாக அமைந்திருக்கின்ற ஒரு பிரத்தியேகமான புவியியல் சூழல் மேற்படி கருத்துக்கள் வளர அதிக காரணமாக்கிக் கொண்டன. சில வேளை தற்போதைய இந்தியாவின் தமிழ்நாடு மாநிலம் தூர வடக்கே அமைந்திருப்பின், அதே போன்று இலங்கையின் தமிழர் பிரதேசங்கள் தெற்கே இருந்திருந்தால் மேற் கூறிய தாய் சேய் கருத்துக்கள் எந்தளவுக்கு வலிமையுடையதாக இருந்திருக்கும் என்பது கேள்விக்குரிய ஒன்றாகும்.

இந்தியாவும் இலங்கையும் அருகருகே ஒரு குறுகியதூர நீரிணையால் பிரிக்கப்பட்ட இரண்டு நாடுகள். இவ்விரு நாடுகளின் மொழி மதம் கலாசாரம் போன்றவற்றில் நெருக்கமும் பிணைப்பும் வரலாற்றுவேர்களின் மூலம் தொடர்பூற்று இருக்கின்றமை மறுக்க முடியாத வரலாற்று உண்மைகளாகும். அதே வேளை இந்தியா பெரியநாடு. அதன் நிலப்பரப்பு சனத்தொகை வளங்கள், வரலாற்று தொன்மை போன்றவற்றால் அதற்குரிய சிறப்பும் முக்கியத்துவமும் மறுக்கப்பட முடியாதவை. இன்றைய உலக அரங்கில் இந்தியா ஒரு வல்லரசுக்குரிய அம்சங்களைப் பெற்று நிற்பதையும் நிராகரிக்க முடியாது. இத்தகைய நிலையில் உள்ள இந்தியா தனது அயலவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்கின்றது என்பதே நமக்கு முன் உள்ள கேள்வியாகும். ஒரு பிராந்திய வல்லரசு ஆதிக்க மனோபாவத்துடன் நடந்து கொள்கின்றதா? அன்றி அயல் நாடுகளை சமத்துவ சகோதரநாடுகளாக ஏற்றுக் கொள்ளும் பக்குவத்துடன் செயல் படுகின்றதா ? இந்தியாவைச் சுற்றியுள்ள தென்னாசிய நாடுகள் ஆறு உள்ளன. இந்தியாவும் சேர்ந்து சார்க் அமைப்பு உருவாகியது. மற்றொரு புறத்திலே சீனா எல்லைப்புற நாடாகவும் அமைந்துள்ளது. இத்தனை நாடுகளுடனும் இந்தியாவிற்கு ஏதோ ஒருவகையில் முரண்படும் பிரச்சினைகளும் உண்டு. அவை அவ்வப்போது தகராறுகளாகவும் மோதல்களாகவும் உருவெடுத்து வந்துள்ளதுடன் தீர்க்க முடியாத சிக்கல்களையும் கொண்டுள்ளன.

ஆனால் இம் முரண்பாடுகளையும் சிக்கல்களையும் இந்தியா அணுகும் முறையானது அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தும் தன்மையுடையதாகவே காணப் படுகின்றது. அவை விரிந்து நோக்கப்படவேண்டியவை. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இந்தியத் தேசியம் என்பது தோற்றுவிக்கப் பட்டது. நாம் இந்தியர்கள் என்னும் உணர்வூட்டப்பட்டது. அதில் தவறேதும் இருக்க முடியாது. ஆனால் அத்தகைய இந்திய தேசியஉணர்வானது சுதந்திரத்திற்குப் பின்னான அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்தில் முழு ஆசியப்

7ம் பக்கம் பார்க்க

நன்றி - நூலகத்திட்டம்



# 'சரோஜா' திரைப்படம் கூறும் செய்தி என்ன ?

'சரோஜா' என்ற பெயர் தமிழ்ப்பெயரா சிங்களப் பெயரா என்ற விவாதம் எடுக்கப்படுகிறது. அது முடிவு காணப்படாத விடயமாக விடப்பட்டாலும் 'சரோஜா' என்ற திரைப்படம் பௌத்த சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்குட்பட்டதா ? என்பது விவாதிக்கப் பட்டுவருகிறது. அதாவது யுத்தத்தை மையமாக வைத்து பல தொலைக் காட்சிப் படங்களும் வெளிவந்துள்ளன. அவற்றில் எல்லாம் குறிப்பாக தொலைக்காட்சி நாடகங்களில் தமிழ் மக்களின் போராட்டம் அர்த்தம்மற்றதாகவே காட்டப்பட்டன. அரசாங்கப் படையை உச்சமாக வைத்துக் காட்டுகின்ற முயற்சிகள் எடுக்கப்பட்டன. செம்மணி போன்ற புதைக்குழிகள் தோண்டப்பட்டதற்கும் பல பாலியல் வல்லுறவுகளுக்கும் மத்தியிலேயே அவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

'யுகவிலக்கு' 'மாணவ நிவாரண' போன்ற வரிசைகளில் 'சரோஜா' அம்முயற்சிகளை உச்சத்திற்கு கொண்டுவந்துள்ளது. அதாவது கலை நுட்பத்துடன் பிரசாரப் பாணியிலன்றி முழுக்க முழுக்க உணர்த்தும் பாணியில் அப்படம் படைக்கப்பட்டுள்ளது. அப்படத்திற்கு சர்வதேச விருதுகள் சில கிடைத்துள்ளன. அதாவது சமாதானத்தை நிலைநாட்ட எடுக்கப்படும் கலைமுயற்சிகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கூறப்பட்டே 'சரோஜாவிற்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. புலிகள் இயக்கம் சிங்கள மக்கள் மீது கொடுமைகளை புரிந்த போதும் சிங்கள மக்கள் தமிழ் மக்கள் மீது அனுதாபத்துடன் இருப்பதாகக் காட்டும் முயற்சியாக இப்படத்தை தயாரித்த சோமரத்ன திஸாநாயக்க கூறுகிறார். அதாவது வேகமான பகை முரண்பாடாக வளர்க்கப்பட்ட இனப்பிரச்சினையில் யுத்தம் புரியப்படுவது மனிதாபிமானம் என்பதையே அடியாகக் கொண்டு அப்படத்தைப் பார்த்தவர்கள் மறுக்க மாட்டார்கள்.

எல்லைக் கிராமத்தில் வாழ்ந்த தமிழ்ச் சிறுமி மீதும் அச்சிறுமியின் தந்தை மீதும் புலிகள் இயக்கத்தின் உறுப்பிணருக்கும் அனுதாபம் காட்டும் சிங்களக் குடும்பம் படுகின்ற கஷ்டங்களை எடுத்துக்காட்டுவது போன்று தோன்றினாலும் அதில் வலியுறுத்தப்படுகின்ற கருத்துக்கள் அழுத்திக் காட்டுகின்ற அம்சங்களைப் பார்க்கின்றபோது சிங்களவர்களின் அனுதாபத்திற்குரியவர்களாக தொடர்ந்தும் தமிழ் மக்கள் இருந்து வந்தால் இனப்பிரச்சினை இருக்காது என்பதே உள்ளார்ந்த செய்தியாக இருக்கிறது.

இப்படம் பற்றி தேசிய ஜனநாயக இயக்கத்தின் ஏடான 'வெற' பத்திரிகையில் (மேமாத இதழில்) வெளிவந்துள்ள விமர்சனத்தில் 'சினிமாவின் மூலம் யுத்தம் ஊக்குவிக்கப்படுவதாக சரோஜா படத்தை பார்க்க முடிவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. அவ்விமர்சனத்தில் இப்படத்தை பர்த்துவிட்டு சினிமா தியேட்டரிலிருந்து வெளியேறுபவர்கள் எங்களிடத்து தமிழர்கள் இன்னும் எதனை எதிர்பார்க்கிறார்கள் ? என்றும் விடுதலைப் புலிகளுக்கு எதற்கு அரசியல் தீர்வு? போன்ற கேள்விகளை எழுப்புவதாகவும் அவ்விமர்சனத்தில் கூறப்பட்டுள்ளது. இப்படம் சிங்கள இனவாதத்துக்கு மேலும் உரமூட்டுவதாகவே வெற பத்திரிகை விமர்சனம் சுட்டிக் காட்டுகிறது.

ஆனால் சில "தமிழ் எழுத்தாளர்களும் ஆய்வாளர்களும்'' இப்படத்தை மனிதாபிமானத்தை வெளிப்படுத்தும் ஒரு படம் என்று இப்படத்திற்கு சப்பை கட்டுகின்றனர். சரோஜா பற்றிய கலந்துரையாடலொன்று அன்மையில் கொழும்பில் நடைபெற்றது. அக்கலந்துரையாடலில் பலர் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் சரோஜா படத்தில் கொச்சைப் படுத்தப்பட்டுள்ளதாக கருத்துத் தெரிவித்துள்ளனர். அவற்றுக்கெல்லாம் தயாரிப்பாளர் சரியான விளக்கம் கொடுக்காமல் சிங்கள இனவாதிகளுக்கும் தமிழ் இனவாதிகளுக்கும் எதிராக மனிதாபிமானத்தை தேடுவதாக மட்டும் கூறி மழுப்பியுள்ளனர். அக்கருத்துடன் ஒத்துப்போவதாக அதாவது அப்படத்தில் மனிதாபிமானம் வலியுறுத்தப்படுவதாக இடதுசாரி எழுத்தாளர்கள் என்று அறியப்பட்ட இருவர் கருத்துச் கூறியுள்ளனர்.

8ம் பக்கம் பார்க்க்

## தேசியம்

6ம் பக்க தொடர்

தேசியத்திலும் பன்முறை கண்டுள்ளோம். இவ்வாறான பண்பு தேசியத்திற்கு மட்டுமே உரித்தல்ல. எந்த அடையாளமும் மற்றைய மனித சமுதாயப்பிரிவுகளினின்று ஒரு சமுதாயப் பிரிவைத் தனிமைப்படுத்தி, அதன் நலன்களைப் பிறரது நலன்களினின்றும் பிரித்து முதன்மைப்படுத்தி காணும் போது, சமுதாயப் பிரிவுகளிடையிலான முரண்பாடுகளின் பகைமையான பண்பு மேலோங்க இடமுண்டு. சகல மனிதரதும் அடிப்படையான தேவைகள் நிறைவேற்றப்படாத வரை, தனி மனிதர் என்ற அளவிலும் சமுதாயப் பிரிவு என்ற அளவிலும் ஒவ்வொரு மட்டத்திலும் மனித உறவு மனித சமத்துவத்தின் அடிப்படையில் அமையாத வரை, மனிதர் தமது இருப்பை மட்டுமன்றிச் சுய அடையாளத்தையும் பேணும் உரிமை அச்சுறுத்தப்படாத நிலைமை உருவாகும் வரை, மனிதரிடையே உள்ள வேறுபாடுகளின் பகைமையான பண்புகள் எழுச்சி பெறுவது தவிர்க்க இயலாதது.

மனித சமத்துவம் என்பது எல்லா மனிதரையும் ஒரே அச்சில் வார்க்கும் செயலால் ஆவதல்ல. அவ்வாறு கொள்வது மார்ஸியமுமல்ல. மாக்ஸியத்தின் இலக்கு சமத்துவமான சமுதாயம், மனிதரை மனிதர் எவ்வகையிலும் ஒடுக்கிச் சுரண்டாத சமுதாயம், ஆற்றலுக்கு ஏற்ப உழைப்பும் தேவைக்கேற்ற நுகர்வும் என்றவாறான சமதர்ம சமுதாயம். ஆயினும் அது நம் முன் இல்லை. அதற்காக உழைப்பவர்கள் தம் கண்முன் உள்ள நிசமான உலகைப் புறக்கணிக்க இயலாது. யதார்த்த உலகை அறியாமல் அதை மாற்ற இயலாது. எனவே ஒரு மாக்ஸியவாதி தேசியமோ மதமோ சாதிகளோ ஆணாதிக்கமோ இல்லை என்று பாசாங்கு செய்ய முடியாது. புரட்சி வந்துவிட்டால் இவை எல்லாமே போய் விடும் என்று கூறி நிஷ்டையில் அமர்ந்து விட முடியாது. சுரண்டற் சமுதாயத்தின் பிரதான முரண்பாடு உற்பத்தி உறவுகள் தொடர்பானதுதான். அது சமுதாயத்தை வர்க்கங்களாகப் பிளவுபடுத்துவது உண்மை. அந்த முரண்பாடான அடிப்படையில் கொண்டே பிற முரண்பாடுகள் எழுச்சி பெறுகின்றன என்பதும் உண்மை. ஆயினும், நம் புரட்சி வரும் வரை சும்மா கிடவுங்கள் என்று ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் போதிக்கிற ஒருவர், நிச்சயமாக நல்ல மாக்ஸியவாதியல்ல.

நன்றி

**"தேசியவாதமும் தமிழர் விடுதலையும"**

# ஏகாதிபத்தியமும் மூன்றாமுலக நாடுகளும்

மூன்றாம் உலக நாடுகள் என்று அழைக்கப்படும் ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகள் அன்றாடம் எதிர் நோக்கும் பிரச்சினைகளும் நெருக்கடிகளும் ஏராளம், கொலனித்துவ அடிப்படையிலும் பண்பாட்டு ரீதியிலும் உலகம் மேற்கு கிழக்காகப் பிரித்துப் பார்க்கப்பட்டது. மேற்குலக நாடுகள் குறிப்பாக ஐரோப்பியர்கள் தமது கொடூர கொலனித்துவச் சுரண்டலாலும் வல்லாதிக்க ஒடுக்கு முனையாலும் கிழக்குல நாடுகளை தமது வேட்டைக் காடாகவே வைத்திருந்தனர். ஆனால் கொலனிய நாடுகளின் மக்கள் கிளர்ந்தெழுந்து போராடி தமது சுதந்திரம் விடுதலையை வென்றெடுத்தனர். கொலனித்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு முன்புவரை நடைபெற்றன. இதில் சில ஆபிரிக்க நாடுகளே இறுதியான சுதந்திர நாடுகளாகின.

இவ்வாறு சுதந்திரம் அடைந்த ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகள் இன்றுவரை கொலனித்து வாதிகள் இழைத்த கொடுமைகளில் இருந்து மீளவில்லை. அவர்கள் பொருளாதார அரசியல் சமூக கலாச்சாரத் துறை களில் ஏற்படுத்திய ஆழமான காயங்கள் இன்னும் ஆறவோ மாறவோ இல்லை. அவர்கள் விதைத்த நச்சு விதைகள் பெரு விருட்சமாகி ஒவ்வொரு நாடுகளிலும் பலதப்பட்ட பிரச்சினைகளை பூதாகரமாக்கி நிற்கின்றன.

இன்றைய பொருளாதார வளர்ச்சி நோக்கில் உலகம் வடக்கு தெற்காகப் பகுத்துப் பார்க்கப்படுகிறது. வடக்கு எனப்படுவது அமெரிக்கா. ஐரோப்பா யப்பான் உள்ளிட்ட பகுதியாகக் காணப்படுகிறது. தெற்கு, ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளாக உள்ளன. தெற்கு நாடுகள் வடக்கின் நவகொலனித்துவச் சுரண்டலால் தேய்ந்து கொண்டே செல்கின்றன. வடக்கின் செல்வமும், வளர்ச்சியும் மேம்பட்டதாகக் கூறப்படும்

> **நவகொலனிய எதிர்ப்பு போராட்டம் அவசியம்**

நாகரீகமும் தெற்கு நாடுகள் மக்கள் மூலம் உறந்து உறுஞ்சி எடுக்கப்பட்டவைகளேயாகும்.

இன்றைய மூன்றாம் உலக நாடுகளில் வறுமை பட்டினி கொடிய நோய்கள் வேலையின்மை வீடின்மை பிரதான பிரச்சினைகளாகி உள்ளன. ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் காணப்படும் பட்டினியும் பஞ்ச மரணங்களும் மனச் சாட்சி உள்ள ஒவ்வொரு மனிதர்களையும் உலுக்கி நிற்கின்றன. இது பற்றி வடக்கின் செல்வந்த நாடுகளான முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகளுக்கு கவலையே இல்லை. அவர்களது முழுக் கவனமும் சுரண்டலும் . கொள்ளை லாபமுமேயாகும். பழைய கொலனித்துவத்தை மக்கள் தமது வீரம் செறிந்த போராட்டங்களின் மூலம் முறியடித்த பின்பு ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்திகள் அரங்கில் இருந்து மறைந்து விடவோ ஓய்வு எடுத்துக் கொள்வோ இல்லை. அவர்கள் புதிய கொலனித்துவ சக்திகளாக புதுப்புதுப் பாதைகளில் மூன்றாம் உலக நாடுகளில் புகுந்து ஊடுருவியுள்ளார்கள். உலக் வங்கி சர்வதேச நாணய நிதியம் உலக வர்த்தக நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றன இப்புதிய கொலனித்துவ வாதிகளின் மிகப் பிரதான கருவிகளாகும். பூகோளமயமாதலும் தாராளமயம் தனியார் மயம் அவர்களது பொருளாதார மந்திரங்களாகும். நவதாரளவாதம் அவர்களது அரசியல் முழக்கமாகும். இவற்றின் கீழ் புதிய புதிய கருத்தியல்கள் மூலம் முதலாளித்துவம் பாதுகாக்கப் படுகின்றது. சோஷலிசத்தின் தற்காலிகப் பின்னடைவை முதலாளித்துவம் தனக்கு சாதகமாகப் பயன்படுத்த முனைகிறது.

மூன்றாம் உலக நாடுகளில் உள்நாட்டுக் குழப்பங்கள், போராட்டங்கள், யுத்தங்களை மூட்டுவதில் வளர்ப்பதில் அமெரிக்க மேற்குலக சக்திகள் இடையிறாது செயல்படுகின்றன. ஆசிய ஆபிரிக்க நாடுகளில் சமகாலப் பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் எடுத்து நோக்கினால் அவற்றின் வேர்கள் கொலனித்துவ முதலாளித்துவ வாதிகளின் விதைகளில் தொடர்புற்று இருப்பதைக் காணலாம். சிம்பாப்வேயின் நிலத்தகராறு முதல் சியாராலியோன் கிளர்ச்சி வரை ஆபிரிக்க நாடுகளில் இதனைக் காணலாம். அவ்வாறு இந்திய பாகிஸ்தான், இலங்கை உட்பட அண்மைய பிஜிப் பிரச்சினை வரை ஆசிய நாடுகளில் காண முடியும்.

இன்று ஐ.நா. பொதுச் சபையில் 187 நாடுகள் சுதந்திரம் உடைய நாடுகளாக அங்கம் பெறுகின்றன. அதேவேளை கைத்தொழில் வளர்ச்சியும் உயர்ந்த வாழ்க்கைத் தரமும் கொண்ட நாடுகளாக 17 நாடுகளே அடையாளம் பெற்றுள்ளன. அதிலும் 7 நாடுகள் உச்ச வளர்ச்சி நாடுகள் என்று கூறப்படுகின்றன. ஏறத்தாள 150க்கு மேற்பட்ட நாடுகள் பின் தங்கிய வளர்ச்சிபெற வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட நவகொலனியத்தால் அமுக்கப்பட்ட நிலையிலே இருந்து வருகின்றன. இந்த மூன்றாம் உலக நாடுகளுக்கு உள்ள ஒரேவழி தமது பொது எதிரியான ஏகாதியத்திய முதலாளித்துவ நாடுகளின் சகலவகை ஆதிக்கங்களையும் எதிர்த்துப் போராட்டமுனைகளைத் திறப்பதேயாகும். அதற்கான சமிக்கைகள் தென்பட ஆரம்பித்து விட்டன.

## வவுனியா

*2ம் பக்க தொடர்*

இதனைக்கருத்தில் கொண்டு அரசு இடையூறுகளையாவது தராமல் இருக்கலாம். இதனை அரசாங்கமே கருத்தில் கொள்ள வேண்டும். தனியார் துறைக்கு ஊக்கம் தருவதாகக் கூறும் அரசாங்கம் வவுனியா போன்ற தமிழ்ப் பிரதேசங்களில் இயங்கும் தனியார் நிறுவனங்களைப் புறக்கணிக்க முற்படுகிறதா ?

ஒரு தொழிற்சாலையில் தான் வவுனியாவில் ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் தங்கியுள்ளன. அரசு இதனை கவனத்தில் இனியாவது எடுக்குமா? அல்லது தமிழ் பிரதேசத்தில் இயங்கும் தொழிற்சாலை என்பதனால் அதனை நிறுத்த சதியா ? புரியவில்லை.

*தேசாபிமானி*
*வுவுனியா.*

## பிராந்திய

6ம் பக்க தொடர்

பிராந்தியத்திலுமே ஆதிக்கம் செலுத்தும் உணர்வாக இந்திய ஆளும் வர்க்கங்களினால் முன்தள்ளப்பட்டது. இப்பொழுது அதனை மேலும் ஒருபடி உயர்த்தி இந்துத்துவ தேசியமாக்கும் போக்கு வலுவடைந்து வருகின்றது.இது தென்னாசிய நாடுகளுக்கு மட்டுமன்றி முழு ஆசியாவிற்கும் உலகிற்கும் சாதகமானதாக அமைய மாட்டாது. ஏனெனில் உலகின் எப்பாகத்திலாவது வல்லரசு மேலாதிக்கம் மேலெழும்பும் போது அங்கே ஒடுக்குதல்களும் யுத்தங்களும் தவிர்க்க வியலாதவையாகி விடுகின்றன. இந் நிலை ஏனைய நாடுகளுக்கும் விரோதமானவையாகும். இதையிட்டு இலங்கையில் உள்ள தமிழர்கள் எவ்வகையிலும் மகிழ்ச்சியோ திருப்தியோ கொள்ள முடியாது. ஏற்கனவே வடக்கு கிழக்கு மக்கள் இந்தியாவின் ஆதிக்க மனப் போக்கை தாராளமாகத் தரிசித்துக் கொண்டவர்கள். அது தாய் நாடு அல்ல என்பதையும் பட்டறிவின் மூலம் புரிந்துகொண்டவர்கள். மீண்டும் அதே சூழல் வருவதை வடக்கு கிழக்கு மக்கள் விரும்ப மாட்டார்கள்.

## பொன்னாடை மான்மியம்

பழமையில் அல்லதைப் பகுத்துமே புதுமையை
நலமெனச் சொல்லுவோர் நேர்மையை ~ வளமென
என்னாளும் நன்மையை எழுதாதே என்பதை
பொன்னாட போர்த்தலிற் புரி !

சொல்போன்று செய்யாராய் சீவியம் செய்வோர்க்கும்
மல்லோடு நல்லுயிர் மாய்ப்போர்க்கும் ~ கல்லோடு
மண் சேர்த்து அரிசியை மலிவாக விற்போர்க்கும்
பொன்னாடை போர்த்துவர் புரி !

ஒரு நூறை சந்திடின் இருநூறாய்ப் பெறுகின்ற
கருத்தோர்க்குச் செய்குவர் கௌரவம் ~ இருநாளில்
தன்னாடை இல்லாத தருமர்தம் சேவைக்கு
பொன்னாடை போர்த்துமா புவி ?

வாக்கினில் வன்மையை வர்ணமே பேசுவர்
ஆக்குவோர் தம்மையும் இழிப்பர் ~ போக்கிலார்க்கு
தன்னாலும் ஆகாமல் தேவைக்கும் அப்பாலே
பொன்னாடை போர்த்தலே பணி !

பலனொன்றும் பாராது பொதுச் சேவை செய்தாரை
இலரிங்கு நிகரென்று இருத்துவர் ~ புலன் கொண்டு
அண்ணாந்து பார்க்குமுன் ஆலாகிப் போர்த்திட்ட
பொன்னாடைக் காகுவர் பலி.

***பட்டணத்தடிகள்***

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
PUTHIYA POOMI
සුදිය පූමි
சுற்று 07 மே/ஜூன் 2000 பக்கம் 8 விலை 10/= சுழற்சி 35

# அந்நிய சக்திகளின் தயவை நாடாது அரசியல் தீர்வுக்கு முன்வர வேண்டும்

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலையையும் போர்க்காலப் பிரகடனத்தின் கீழான அவசரகால விதிகளையும் மக்கள் விரோத தொழிலாளர் விரோத சக்திகள் தத்தமது நலன்களுக்கு ஏற்றவாறு பயன்படுத்தி வருகின்றன. அதே வேளை பிரச்சினைகளின் பன்முகப்பாதிப்புக்களையும் தாங்கி நிற்கும் மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். தமது அன்றாட அவலங்கள் நிறைந்த வாழ்க்கை பற்றிய எந்தவித உணர்வுகளையும் வெளிக் காட்ட முடியாதவாறு இன்றைய போர்க் காலப் பிரகடனச் சூழலால் அமுக்கப்பட்டுள்ளனர். இந் நிலையில் அந்நிய சக்திகள் தமது உள் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்கு இதுவரை காத்திருந்தமைக்கான காலம் கனிந்துள்ளது என்னும் மகிழ்ச்சியில் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான ஒரு தீர்வு காணப்பட்டிருந்தால் இன்றைய கொடூர யுத்த நிலை வளர்ந்திருக்க மாட்டாது. தேசிய இனப் பிரச்சினையை நாட்டில் வளர்த்தவர்கள் சாதாரண சிங்கள தமிழ் மக்கள் அல்லர். ஆளும் வர்க்க சக்திகளான நிலவுடமை முதலாளித்துவ வர்க்கத்தினராகவே இருந்து வந்துள்ளனர். தாங்கள் உருவாக்கி வளர்த்த பாறாங் கல்லின் மீதே இன்று தங்களது தலைகளை மோதவேண்டி ஏற்பட்டுள்ளது. எனவே இன்றைய சூழலிலாவது நாட்டையும் மக்களையும் முதன்மைப்படுத்தி தூரநோக்குச் சிந்தனையுடன் தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வைக் காண்பதற்கு அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஏனைய அரசியல் சமூக சார்பு சக்திகள் ஒன்றிணைந்து செயலாற்ற முன்வரல் வேண்டும். அத்தகைய அரசியல் தீர்வு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சுயநிர்ணய

# புதிய ஜனநாயக கட்சி அறிக்கை

தருணத்தைப் பயன் படுத்தி இலங்கைக்குள் புகுந்து கொள்வதற்கு விரைந்து செயலாற்றியும் வருகின்றன. ஆதலால் அரசாங்கம் தனது முடிவுகளில் தூரநோக்கில்தான் செயல்படுகின்றதா என்பதையிட்டு ஆழ்ந்த நோக்கிச் சிந்திப்பது அவசியமாகும். யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கும் அரசியல் தீர்வை நோக்கிச் செல்வதற்கும் இப்பொழுது காலம் கடந்து விட வில்லை என்பதை அரசாங்கம் தனது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளத் தவறுவது துர்ரதிஷ்டமாகும். அதேவேளை தற்போதைய போர்ச் சூழலுக்குள் சிக்கியுள்ள குடாநாட்டின் ஐந்து லட்சம் மக்கள் நாட்டின் ஏனைய பிரதேசங்களின்று சகல வழிகளிலும் தொடர்புகள் இழந்த நிலையில் உள்ளனர். அவர்களின் உணவு, மருந்து, இருப்பிடம், பாதுகாப்பு போன்றவற்றுக்கான உத்தரவாத்தை அரசாங்கம் வழங்கவேண்டும். இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேலும் அவ் அறிக்கையில், தேசிய இனப் பிரச்சினைக்கு கடந்த காலங்களில் நியாயமானதும் உரிமை அடிப்படையிலான் தமிழ், முஸ்லிம், மலையக மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய அடிப்படைகளைக் கொண்டிருத்தல் அவசியமானதாகும் என்பதை எமது கட்சி வற்புறுத்துகின்றது. இன்றைய இக்கட்டான நிலையில் நியாயமான அரசியல் தீர்வை பேச்சுவார்த்தை மூலம் காணத் தவறி வல்லரசுகளின் தயவை நாடி நிற்க முற்பட்டால் அதன் விளைவு நாட்டை அவர்களது ஆதிக்கப் பிடிக்குள் தள்ளிக் கொள்வதாகவே அமைந்து விடும் என்பதையும் எமது கட்சி மிகுந்த எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டுகின்றது என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வல்லரசுகள் ஊடுருவ

1ம் பக்கம் தொடர்

கொள்வதற்காகப் போட்டியிட்டு நிற்கும் வல்லரசுகளினால் ஆபத்து ஏற்பட்டுள்ளதா ?

பூகோளமயமாதல் - தராளமயம் தனியார்மயம் என்பனவற்றால் நாட்டின் சுதந்திரம் இறமை என்பன ஏற்கனவே கேள்விக்குட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அவற்றை மறைப்பதற்கு முன்னுக்கு கொண்டுவரப்பட்ட தேசிய இனப் பிரச்சினையை உரியகாலத்தில் உரிய வழிகளில் தீர்வுக்கு கொண்டு வரத் தவறியவர்கள் யார் ? எனவே உண்மையான குற்றவாளிகளும் நாட்டின் விரோதிகளும் சரியானபடி அடையாளம் மக்களால் கண்டு கொள்ளப்படல் வேண்டும்.

## இப்படிக் கூறுகிறார்

"உலகமயமாதல், தாராளமயமாதல், தனியார்மயமாதல் ஆகிய முன்னேற்றத்திற்குரிய மூன்று வழிகளிலான விரைவுப் பாதையில் ஏழைகள் நலிவுற்றோர் என்போர் பாதுகாப்பாகக் கடப்பதற்கு நடைபாதை ஏதும் இல்லாமல் இருக்கிறது. ஏழைகள் குடியிருக்கும் சேரிகளுக்கு நடுவே கோடீஸ்வரர்களின் நகர்கள் முளைக்கின்றன. சேறும் சகதியும் சாக்கடையாகவும் உள்ள வசிப்பிடங்களுக்கு நடுவே அண்ணார்ந்து பார்க்கக் கூடிய தொழிற் சாலைகள் கட்டப்படுகின்றன. நமது சமூகத்தில் ஒரு பகுதியினர் போத்திலில் அடைக்கப்பட்ட உயர் ரக குளிர்பானத்தை உறுஞ்சிக் குடிக்கின்றனர். மற்றைய வர்களோ மணலும் பாசியும் கலந்த அசுத்த நீரை மொண்டு குடிக்கின்றனர். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பர். இவர்கள் நீண்டகாலமாகவே சாதுவாக இருக்கிறார்கள் என்பதைச் சமூகம் மறந்து அலட்சியப்படுத்தக் கூடாது."

இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் குடியரசுதின உரையில்.

## ஐக்கிய தேசியக் கட்சி யார் பக்கம் ?

நாட்டின் இன்றைய சூழலில் ஐக்கிய தேசியக் கட்சி அமெரிக்கா சார்பு நிலையைக் கொண்டுள்ளதா அல்லது இந்திய சார்பாக உள்ளதா? என்பது பற்றி கேள்வி எழுந்துள்ளது. ஐ.தே.கட்சியின் அடிப்படையான பொருளாதார அரசியல் நிலைப்பாடு எப்பொழுதும் ஏகாதிபத்தியம் சார்பானதாகவே இருந்து வந்துள்ளது.

முன்பு டி.எஸ். சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா போன்றோர் பிரித்தானிய ஏகாதிபத்திய விசுவாசிகளாக இருந்து வந்தனர். ஆனால் ஜே. ஆர். எப்போதும் அமெரிக்க தாசனாகவே விளங்கி வந்தார். இப்போது ரணில் தலைமையில் அமெரிக்க விசுவாசமே மேலோங்கி நிற்பதாகக் கூறப்பட்டாலும் தற்போதைய நிலையில் அவர் இந்தியாவின் அரவணைப்புக்குள் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. அமெரிக்க இந்திய முரண்பாடு இன்று அதிகரித்த நிலையில் இல்லை. ஆனால் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் நலனுக்கும் அதன் தலையீட்டுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி பச்சைக் கொடி காட்டி நிற்பதாகவே அவதானிகள் கூறுகின்றனர். அமெரிக்காவை எதிர்க்காது நிராகரிக்காது இந்தியாவின் அரவணைப்புடன் மீண்டும் அதிகாரத்திற்கு வந்து கொள்ளும் ஒரு பாதையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி நடந்து வருகின்றது. இதில் இந்தியாவிற்கு தனது நலன் முக்கியம். ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகார நலன் அவசியம். இதற்கு அமெரிக்காவின் ஆசர்வாதத்தையும் பெற்றுக் கொள்ள அது முயன்று நிற்கிறது.

## சரோஜா

7ம் பக்கம் தொடர்

அதாவது வடக்கில் சாதியத்திற்கு எதிராக இடம்பெற்ற போராட்டக் காலத்தில் எழுத்துத்துலகில் முக்கியமானவர்கள் என்று அறியப்பட்ட இவர்கள் 'மனிதாபிமானத்துக்கு' புதுவிளக்கம் கொடுக்க முற்பட்டுள்ளமை சிந்திக்க வைக்கிறது.

மனிதாபிமானம் என்பது முதலாளித்துவ கருத்தியல் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அதாவது முதலாளித்துவத்தை பாதுகாப்பதற்காக முதலாளித்துவத்தால் அறிமுகம் செய்யப்பட்டதே மனிதாபிமானக் கருத்தியலாகும். முதலாளித்துவ அடக்கு முறைக்கு எதிராக முதலாளித்துவத்தை கேள்விக் குட்படுத்த 'மனிதாமிமானம்' என்ற கருத்தியல் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு வரையறை உண்டு. ரவீந்திரநாத் தாகூர், ஆர். கே. நாராயன் போன்றோர் காலனித்துவத்தை கேள்விக்குட்படுத்த 'மனிதாபிமானத்தை' பிரயோகித் துள்ளனர். சில மாக்சிச, இடதுசாரி எழுத்தாளர்களும் அவ்வாறே மனிதாபிமானத்தை பிரயோகித்தனர் என்பதைக் காணமுடியும்.

ஆனால் 'மனிதாபிமானம்' என்பது அடக்கும் ஆதிக்க வர்க்கத்தினரினதும் பெருமின அகங் காரத்தினதும் கருவியாக பாவிக்கப்படும்போது அது முற்போக்கானதாக இருக்க முடியாது. அதாவது மனிதாபிமானம் அடக்கப்படுபவரின் கருவியாக இருக்கும் போதும் மட்டுமே முற்போக்கானதாக அமைய முடியும். அத்துடன் சமூகமாற்றத்திற்கு மனிதாபிமானம் அடிப்படையான அணுகுமுறையாக இருக்கமுடியாது என்பதை இட்துசாரி எழுத்தாளர்கள் எனப்படுவோர் அறியவேண்டும்.

பேரினவாத அனுதாபத்துடன் தமிழர்கள் வாழ வேண்டும் என்ற "பேரினவாத மனிதாபிமானத்தை" பயன்படுத்தி உயிர்வாழ நினைத்தால் அதனைச் செய்வதற்கு சிலருக்குத் தெரிவு இருக்கலாம். ஆனால் முழுத் தமிழர்களையும் அத்தெரிவை நோக்கித் தள்ள முயற்சிப்பது அடிபணிதலாகும்.

எந்தவொரு கலைப்படைப்பும் சாராம்சத்தில் ஒரு செய்தியை வெளிப்படத்தவே செய்யும். அத்தகைய செய்தியானது மக்கள் மத்தியில் எத்தகைய பிரதிபலிப்பை ஏற்படுத்துகின்றது என்பது முக்கியமானதாகும். தேசிய இனப்பிரச்சினை யுத்தவடிவின் உச்ச நிலையை அடைந்துள்ள இன்றைய நிலையில் சரோஜா திரைப்படம் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் செய்திதான் என்ன ? என்று கேட்பதே அப்படத்திற்குரிய விமர்சனத்தின் மையமாகும்.

மதி.

# ஜே.வி.பி. பதில் கூறுமா ?

**நாடு** யுத்தநிலைமையில் வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கடுமையான ஒழுங்குவிதிகள் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன. இவ்வேளையில் ஜே.வி.பியும் நவசமசமாஜ கட்சியும் பிக்கட் இயக்கமொன்றை நடத்த எத்தனித்த போது தடுக்கப்பட்டுள்ளது. கடுமையான பொதுமக்கள் பாதுகாப்பு விதிகளை எதிர்த்து அவ்வியக்கத்தை ஏற்பாடு செய்ததாக ஜே.வி.பி. அறிவித் திருந்தது. நவசமசமாஜக்கட்சியோ யுத்தத்தையும் எதிர்த்தே ஜே.வி.பியும். தாங்களும் சேர்ந்து அவ்வியக்கத்தைச் செய்ததாக வழமைப்போல் கூறியிருந்தது.

நவசமசமாஜக் கட்சி என்ன நிலைப்பாடு எடுத்தாலும் அதனுடைய சாயம் வெளுத்த கதை எல்லோருக்கும் தெரியும். ஆனால் ஜே.வி.பியின் நிலைப்பாடுகள் எப்போதுமே தெளிவாக இருக்காமல் குழம்பியே இருந்துவருகிறது.

தாய்நாட்டு மக்களே ஐக்கியத்துடன் முன்செல்வோம் என்ற தலைப்பில் (சிங்களத்தில்) ஒரு துண்டுப்பிரசுரம் ஜே.வி.பியால் கடந்தவாரம் வெளியிடப் பட்டு விநியோகிக்கப் பட்டிருந்தது. அதன்படி இனப்பிரச்சினை பற்றி அவர்களிடம் எவ்விதமாற்றமும் இல்லை என்று தெரியவருகிறது. நடைபெறும் யத்தத்தை இனவாத யுத்தம் என்றாவது சிலகாலம் கூறிவந்தவர்கள் தற்போதிருக்கும் நிலைமையில் தற்போதைய நிலைமை பற்றி விஷேடமாக எதுவுமின்றி அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலேயே அழிவுகள் ஏற்பட்டு வருவதாகவும் அதனால் புலிகள் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலப்பட்டு வருவதாகவும்நாட்டுப் பிரிவினைக்கே வழிவகிக்கும் என்றும் அப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது. இவர்களது பிரசுரத்தில் இருக்கின்ற கடைசி பந்தி இவ்வாறு கூறுகிறது. 'தமிழ் இனவாதிகளால் (இவர்கள் இனவாதிகள் என்று யாரை

தேசிய முன்னணி சிங்கள வீரவிதான சிங்கள உறுமய போன்ற சிங்களப் பேரினவாத அமைப்புகளில் அணிதிரண்டுள்ளனர். அவர்களால் குறிவைக்கப்பட்ட மக்களையே ஜே.வி.பியும் குறிவைக்கிறது. இதனை தேர்தல் கண்ணோட்டம் என்று கூறாமல் வேறு எப்படி கூறுவது ? நாட்டின் பெரும்பாலான மக்களை சிங்கள இனவாதத்திற்குள் தள்ளுவதற்கு இரண்டு பேரினவாத கட்சிகளும் (ஐ.தே.க. சிறிலங்கா சுதந்திரக் கட்சி) மேற்கொண்ட நடவடிக்கைகளை மேவ முடியாமல் போனதற்கு ஜே.வி.பி. போன்ற கட்சிகள் இனப்பிரச்சினையில் சரியான நிலைப்பாட்டை முன்வைத்து வேலை செய்யாமையே காரணம் என்பதை மறுத்துரைக்க முடியுமா? பேரினவாதிகள் கூறுவது போன்றே தமிழ் மக்களுக்கு விஷேட பிரச்சினைகள் எதுவும் இல்லை என்று ஜே.வி.பியும் கூறிவருவதால் பேரினவாதிகளின் கருத்தியலை முறியடிக்க முடியாமல் போனது.இடதுசாரிகள் என்று கூறிக்கொண்டு, அதிதீவிரவாத நடவடிக்கைகளிலும் இறங்கியிருந்தாலும் எஸ். டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்காவின் நிலைப்பாட்டிற்கு தாழ்ந்த நிலைப்பாட்டை இனப்பிரச்சினை விடயத்தில் எடுப்பது, பெரும் பான்மை சிங்கள மக்களை கவர்வதற்கேயன்றி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கல்ல.

இனவாதத்திற்கு எதிரென்று கூறிக்கொள்ளும் இனவாதத்திறகு எதிராக முன்னெடுத்த வேலைகள் என்ன? இனவாதத்திற்கு எதிராக முறையான வேலைகளை முன்னெடுக்காமைக்கு காரணம் தற்போது கூர்மையடைந்துள்ள தேசிய இனப்பிரச்சினையை சரியாக விளங்கிக் கொள்ளாமை. அல்லது 'காரணத்துடன்' விளங்கிக் கொள்ளாமையே.

## சகல ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்பதே மார்க்சிசமாகும் !

குறிப்பிடுகிறார்களோ தெரியாது.) தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கக் கூடிய வெற்றி என்றெதுவும் இல்லை என்றும் எதிராக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஐக்கியப்பட்டு பாரிய இயக்கமாக வளரவேண்டியதன்றி வேறு சரியான வழியேதும் இருக்க முடியாது என்றும் கூறுகிறது. மேலும் மேற்படி ஐக்கியம் எவ்வளவு முக்கியமோ அந்தளவுக்கு நாட்டு பிரிவினையை உறுதியாக தோற்கடிக்க வேண்டியதும் முக்கியமாகும். அந்த ஐக்கியத்தைப் போன்று தாய்நாட்டை எக்கால த்திற்கும் பாதுகாத்துக் கொடுக்க வேண்டியது அவசியமாகும். நாட்டை இந்த அழிவிற்கு கொண்டு வந்துள்ள ஏகாதிபத்தியத்துடன் இணைந்துள்ள முதலாளித்துவ ஆட்சியை தோற்கடித்து தாய்நாட்டை நேசிக்கும் தலைமையிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. இந்த பிரசுரத்தின் மூலம் நாம் விளங்கிக் கொள்வது என்ன ? யுத்தம் பற்றி வெளிப்படையாக எதுவும் கூறவோ அவ் யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்கான யோசனைகளை முன்வைக்கவோ ஜே.வி.பி இன்னும் தயாராக இல்லை. தமிழ் மக்கள் அவர்களின் போராட்டத்தின் நியாயப்பாட்டை அறியாதவர்களாக இல்லை. 1988 களில் 'தேசப்பிரேமி' (தேசபக்கதி) என்ற நிலைப்பாட்டில் பெரும்பான்மை சிங்களமக்களை வென்றெடுப்பதில் ஜே.வி.பி. தோல்வி கண்டது. அன்று தேசப்பிரேமியாக இருந்த பலர் பயங்கரவாத எதிர்ப்பு இடதுசாரி அல்லது மாக்சிச சக்திகள் என்று ஜே.வி.பி. தன்னத்தானே கூறிக்கொண்டபோதும் அதனுடைய வர்க்க நிலைப்பாடு தொழிலாளர் வர்க்க நிலைப்பாட்டல்லாததாக இருப்பதாலும் இனப்பிரச்சினையை சரியாக பார்க்கும் தேவை ஏற்படவில்லை.

நடைபெறும் யுத்தத்தை காரணம் காட்டியே ஏகாதிபத்திய, மேலாதிக்க வெளிநாட்டு சக்திகள் இங்கு தலையிட முயற்சிக்கின்றன. அதனால் யுத்தத்தை நிறுத்துவதற்கு ஆகக்குறைந்த தீர்வைக் கூட முன்வைக்காது தமிழ்மக்களை ஐக்கியப்படும் படி கேட்பது எவ்வகையில் சரியானதாக இருக்க முடியும்.

தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை சுயாட்சியை அங்கிகரிக்காவிட்டால் சிங்கள மக்கள் மத்தியில் இனவாத்திற்கு எதிராக சரியான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது சாத்தியமில்லை என்று இன்றும் உணராமல் இருப்பது சரியாக இருக்க முடியாது.

அரசாங்கமும் பேரினவாதிகளும் பார்க்கின்றவாறு இப்பிரச்சினையை பார்ப்பதும் யுத்தம் பற்றி அவைகள் கூறுகின்றவாறு கூறுவதும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைக்கு துணைபோவதன்றி தமிழ்மக்களின் விடுதலைக்கு வழிகோலுவதாக இராது.

ΩΩΩ

வெளியிடுபவர் : இ. தம்பையா இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூ. கே. பிரின்டஸ். 26/1இ சிவானந்தா வீதி, கொழும்பு 13.